
# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, வைகாசி 3 உ வியாழன் (16-5-69) ஸபர் 28 புத்தகம் 23 இதழ் 29


## தமிழர்களுக்கெதிராக சிங்கள வெறியைத் தூண்டும்

# ரகசிய இயக்கம்!

நாட்டில், தமிழ் மக்களுக்கு எதிரான பிரசாரங்களிலும் நடவடிக்கைகளிலும் சிங்களவர்களிடையே செயற்படும் புதிய இயக்கம் ஒன்று மும்முரமாக ஈடுபட்டுவருதாக சுதந்திரனுக்கு கிடைத்த தகவலொன்று கூறுகிறது. தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள இனவெறியை தீவிரமாக தூண்டிவிட்டுவரும் இவ்வியக்கத்தின் பெயர் ஆரிய சிங்கள சமாஜம் என்றும், இவ்வியக்கத்தில் சகல சிங்களக் கட்சிகளிலுமுள்ள தமிழ் துவேஷிகளும் பல அமைச்சர்களும் இடம் பெற்றுள்ளதாகவும் தெரியவருகிறது. அரசாங்கத்தில் தற்போது உயர் பதவி வகிக்கும் இனவெறிபிடித்த சிங்கள அதிகாரிகள் பலரும், இளைப்பாறிய அதிகாரிகளும் இவ்வியக்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளனராம்.

தி.மு.க. நாம் தமிழர், தமிழ்ப்பட எதிர்ப்புபோன்ற கோஷங்களை தூண்டிவிட்டுவருபவர்கள் ஆரிய சிங்கள சமாஜத்தினரே என்றும் அறியப் படுகிறது. யூ. என். பி. — சுதந்திரக்கட்சி இணைப்பு முயற்சியிலும் இவர்களே ஈடுபட்டுள்ளனர்.

இதே வேளையில் தமிழ்ப் படங்கள் திரையிடப்பட்டுள்ள தியேட்டர்களுக்கு முன்னால் ஆங்காங்கு பரவலாக சிங்களப் பகுதிகளில் நடைபெற்று வரும் வன்முறை ஆர்ப்பாட்டங்களுக்கு அதிகார பீடத்தினர் சிலரும் பூரண ஆதரவு அளித்து வருவதாகத் தெரிய வருகிறது. தமிழ்ப்படத்துக்கு எதிராகத் தூண்டிவிடப் பட்டு வரும் வெறித்தனமான ஆர்ப்பாட்டங்களின் பின்னால் அதிகாரபீடத்தினர் பலர் இருப்பதால், காலித்தனத்தில் ஈடுபடும் சிங்களக் காடையர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையெடுப்பதற்கு பொலிஸ் துறையும் அஞ்சுவதாக சொல்லப்படுகிறது.

பொதுஜன அபிப்பிராயத்தைச் செயற்கையாகக் கட்டியெழுப்பி மாவட்ட சபை மசோதாவைக் கைவிடுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தியது போல தமிழ் படங்களுக்கு எதிராகவும் நாட்டில் பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கி, நாட்டில் கிளர்ச்சியைத் தூண்டிவிட்டு அதைச் சாட்டாகக் காட்டித் தமிழ்ப் படங்களுக்கு முற்றுகத்தடை விதிக்கச் செய்வதற்கு இந்த சதித்திட்டம் தீட்டப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

அனுராதபுரத்தில் அண்மையில் தமிழ்ப் படங்கள் திரையிடப்பட்டிருந்த தியேட்டர்களுக்கு முன்னால் காடைத்தனமான ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதைத் தொடர்ந்து, தமிழ்ப் படங்கள் திரையிடுவதைக் குறித்த தியேட்டர்களின் நிர்வாகத்தினர் நிறுத்தியுள்ளனர். இதே போன்று சிங்களப் பகுதியில் தமிழ்ப்படங்கள் திரையிடப்பட்டுள்ள ஏனைய தியேட்டர்களின் முன்பும் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்கு இப்போது திட்டம் தீட்டப்பட்டு வருகிறதாம்.

(9ம் பக்கம் பார்க்க)


## பிரதமருக்கு கோப்பாய் எம். பி. கடும் ஆட்சேபம்

'பௌத்த மதத்தவர் எவருமே இல்லாத எனது தொகுதியிலுள்ள பத்தை மேனியில் சட்டவிரோதமாக நிறுவப்பட்டுள்ள சிங்களபௌத்த பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்க விருப்பது வியப்புக்கிடமானது. இதை அரசாங்கம் உடனே கைவிடவேண்டும், அரசாங்கம் இப்படிச்செய்வது 1960ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டுள்ள கல்வி மசோதாவுக்கு முரண்பட்டது.''

—இவ்வாறு கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை பிரதமருக்கும் கல்வி அமைச்சருக்கும் அனுப்பியுள்ள ஆட்சேபத் தந்தி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

## "நல்ல நடிகர்!"

சிவசிதம்பரத்தின் 6 முகமுடித் தோற்றங்கள்




தமிழரசுத் தலைவர்கள் நல்ல நடிகர்கள் - சிவசிதம்பரம்

# உடுப்பிட்டி எம்.பி. மன்னிப்பு கேட்கவேண்டும்!

## எம். ஜி. ஆர். மன்றங்கள் கோரிக்கை!

பல்லாயிரக் கணக்கான மக்களின் உள்ளங்களில் இடம் பெற்றுள்ளவரான கொள்கைவீரர் எம். ஜி. ஆரைக் குறை கூறுவதற்கு யார் இந்த மூனுச் சிவசிதம்பரம்? தமிழ் மக்களின் மேன்மைக்காக அண்ணா வழியில் உழைக்கும் கொள்கைத் தங்கம் மக்கள் திலகம் எம். ஜி. ஆரின் பெருமையைக் குறைத்து மதிப்பிட உடுப்பிட்டி எம். பிக்கு என்ன உரிமையிருக்கிறது? எம். ஜி. ஆருக்கு இலங்கை ரசிகர்கள் ஆதரவு கொடுக்காவிட்டால் அவரது படங்களுக்கு வரவேற்புக் கிடைக்காது என்று திரு. சிவசிதம்பரம் கூறியகருத்தை வாபஸ் பெற்று எம். ஜி. ஆர். ரசிகர்களின் உள்ளத்தைப் புண்படுத்தியதற்காக மன்னிப்புக் கேட்கவேண்டும்'' —இக்கருத்துப்படி நாடெங்கிலுமுள்ள பல எம். ஜி. ஆர். மன்றங்களும் நூற்றுக்கணக்கான எம். ஜி. ஆர். ரசிகர்களும் சுதந்திரனுக்கு அனுப்பியுள்ள கடிதங்களில் தெரிவித்துள்ளனர். அக்கடிதங்கள் தெரிவிக்கும் சாரம் இதுதான்:—

''தென் இந்திய தி. மு. க. தலைவர்களின் ஒருவரான எம். ஜி. ராமச்சந்திரனுக்காக கண்ணீர் விடுகிறார்கள் இந்த நாட்டு அரசியல் வாதிகள். இன்று ஈழத்து சினிமா ரசிகர்கள் ஆதரவு கொடுக்காவிட்டால் எம். ஜி. இராமச்சந்திரனுக்கோ அல்லது அவரது படங்களுக்கோ வரவேற்பு இருக்காது''

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக்குரல்

# எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு

நமது தொடர்கதை

## அத்தியாயம் (18)

ஆசைதான் துன்பத்திற்கெல்லாங் காரணமென புத்தர் போதித்ததாக ரகு படித்திருந்தான். அது உண்மையென்பதையும் அவன் உணர்ந்துதான் இருந்தான். ஆனால் அந்த ஆசையைத் துறக்க அவனுக்கு வழி தெரியவில்லை. புத்தர்கூடத்தான் வாழ்க்கையில் பல ஆசைகளை அனுபவித்த பின்புதான் ஆசை துன்பத்திற்குக் காரணம் என்கிற தத்துவத்தை உணர்ந்தார் என்பது அவன் வாதம். மகாத்மா காந்திகூட வாழ்க்கையில் அநுபவிக்க வேண்டியதையெல்லாம் அநுபவித்துக் களைத்த பின்புதான் காந்தீயத் தத்துவங்களை உலகுக்குப் போதிக்கத் தொடங்கினார் என்று உமாவுடன் அவன் ஒருநாள் முழுதும் வாதாடியிருக்கிறான்; அது ஒரு பழைய ஞாபகம்.

ஆமாம்! உமா ஒரு புத்தகப் பிரியை என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். அவளிடம் ஒருமுறை அவன் ஒரு புத்தகங் கேட்டிருந்தான். அதற்கு அவள் அவனிடம் காந்தியின் சுயசரிதையாகிய சத்திய சோதனையைக் கொடுத்து இதுதான் உங்களுக்கு ஏற்ற புத்தகம் படியுங்கள் என்று குறும்பாகக் கூற இன்னும் இருபது வருடங்களுக்குப் பிறகு இதைப் படிக்கிறேன். இப்போது வேறு நல்ல புத்தகமாகக் கொண்டுவா என்றான். அவளும் விட்டுக்கொடுக்காமல் அப்படி எதற்காகக் கூறினீர்கள் என்று கேட்க ''காந்திக்கு இந்த தத்துவங்கள் உதித்த வயது எனக்கு வருவதற்கு இன்னும் இருபது வருடங்கள் இருக்கின்றன. எனது வயதில் காந்திகூட என்னைவிட மோசமாகத்தான் இருந்திருப்பார் என்று அவன் விளையாட்டாகக் கூறினான். அதை வைத்துக்கொண்டு உமா அவனிடம் வாதாடத் தொடங்கிய போது ஈற்றில் அவன் அவளுக்குப் பணிந்துபோகவேண்டியதாயிற்று; அவ்வளவு தூரத்திற்கு அவள் மகாத்மாவைப் பற்றி அறிந்து வைத்திருந்தாள்;

ஆமாம்! இப்போ அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம். எதையோ நினைத்து எங்கோ பேய்விட்டான் அவன். துன்பத்திற்குக் காரணமான ஆசையை நிர்மலாவின் மனதில் வளர்க்கக்கூடாது என்றுதான் அவன் நினைத்தான். அதனால் அந்த ஆசையை முளையிலேயே கிள்ளிவிடவேண்டும் என்பதே அவன் குறிக்கோளாக இருந்தது. அதற்கு ஏற்றவொரு சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தான் அவன்.

பவானிக்கும் குழந்தை பிறந்து ஐந்து நாட்களாகிவிட்டன. டாக்டரின் உத்தரவின்பேரில் அவள் வீட்டுக்கும் வந்தாயிற்று. பவானிக்குக் குழந்தை பிறந்த விடயத்தை ரகு அவர்கள் கொழும்பு வந்த அந்நிய நாட்களில் தங்கியிருந்த வீட்டுக்காரியான புனிதத்திற்கு மட்டுந்தான் அறிவித்திருந்தான். அவனைப் பொறுத்தவரை அவர்கள் மட்டுந்தான் அவனுக்கும் பவானிக்கும் உறவினராயிருந்தனர். நிர்மலா தானாகவே ஆக்கிக்கொண்ட உறவினால் நாள்தோறும் வந்து குழந்தைக்கு வேண்டிய சகல காரியங்களையும் செய்துவிட்டுப் போவாள். ரகுவுக்கு அவள் உதவி எவ்வளவோ ஒத்தாசையாக இருந்தது.

திக்கற்றவர்களுக்குத் தெய்வம் துணையெனக் கேள்விப்பட்டிருந்தான் ரகு. யாரோ ஒரு பெண்ணுக்கு அவள் தாய் கோயிலுக்குச் சென்று திரும்பி வரத் தாமதித்த போது பிள்ளைப் பேறுகூட சிவபெருமான் தாய்வடிவில் வந்து பார்த்துவிட்டதாகச் சமய பாடத்திற் படித்திருக்கின்றான். அப்படி நடக்குமா என அப்போது அவன் ஆராய்ச்சி செய்தது உண்மை. ஆனால் இன்று நடப்பவற்றைப் பார்க்கும்போது அவையெல்லாம் உண்மையாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்று நம்பத் தோன்றியது. ஆமாம்! நிர்மலா இறைவடிவத்தில் வந்த ஒரு பேருதவி என அவன் கருதினான். அதனால் அவள் மனதைப் புண்படுத்த அவன் அணுவும் விரும்பவில்லை. அந்த நேரத்தில் அவள் உள்ளத்தில் ஒரு போலியான ஆசையை வளர்த்துக் கொள்ள இடமளிக்கவும் அவன் விரும்பவில்லை. இந்த இக்கட்டான நிலையில் எழுந்துள்ள ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவன் பட்டபாடு...!

ஒருநாள் காலை. பவானியின் குழந்தையை நிர்மலா நீராட்டிக் கொண்டிருந்தாள். அந்நேரம் பவானி உள்ளே ஏதோ அலுவலாக இருந்திருக்க வேண்டும். அதை ஒரு நல்ல சந்தர்ப்பமாகக் கருதிய ரகு மெதுவாக அவள் பக்கத்திற் சென்று அவள் பிள்ளைக்கு நீராட்டும் விதத்தைப் பார்த்து ரஸிப்பதுபோல ரஸித்துவிட்டு...! மிஸ் நீங்க ஊரார் குழந்தைக்கே இவ்வளவு அழகாக நீராட்டினால் நாளைக்கு உங்களுக்கென ஒரு குழந்தை பிறந்தால் எப்படியிருக்கும் என்று யோசித்துப் பார்க்கிறேன்' என்றான். நிர்மலா அவனைப் பார்த்த பார்வை என்னை இப்படி மரியாதையாக அழைக்கவேண்டாம் என எத்தனைதரம் கூறிவிட்டேன் என்று கேட்பது போல் இருந்தது.

'உங்களைவிட நான் ஆறு வயதுக்கிழமையாக்கும்...!' அவள் பார்த்ததின் அர்த்தம் இப்போது ரகுவுக்குப் புரிந்தது.

'உண்மைதான் ஆயினும் அந்தஸ்தில் நீங்கள் என்னைவிட உயர்வல்லவா...... அதனாற்தான் உங்களை ஒருமையில் பெயர்சொல்லி அழைக்க எனக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது.'

''நீங்கள் என்னை மரியாதையில் அழைப்பதைக் கேட்கும்போது, எனக்கு அதைவிடச் சிரமமாக இருக்கு'' என்று பவானி கூறியபோது ரகுவுக்குச் சிரிக்க வேண்டும் போல இருந்தது. ஆண்கள் பெண்களை அடிமையாக்குகிறார்கள் என்று சமூகத்தின் ஒரு பகுதியினர் குறைப்பட்டுக் கொள்ளும்போது இந்தப் பெண்கள் தாங்களாக ஆண்களுக்கு அடிமையாக விரும்புகிறார்களே, இந்தப் பெருங் குறையையாருக்கு எடுத்துக் கூறுவது என்று சிந்தித்தான் அவன், நிர்மலா இதற்குமுன்பு கூடப் பல முறை அவனிடம் இதே வேண்டுகோளை விடுத்திருக்கிறாள். ஆனால் அப்போதெல்லாம் அவள் கூற்றுக்கு அவன் செவிசாய்த்ததாகத் தெரியவில்லை.

ஆனால் இன்று அவள் வேண்டுகோளுக்கு மதிப்புக் கொடுக்க அவன் விரும்பினான். தன்னைப் பற்றி ஒழிவு மறைவின்றி முழுவரலாற்றையும் அவளிடங் கூறிவிடத் துடித்தான் அவன். அதனால் வருவது வரட்டும் என்ற அசட்டு மனப்பான்மையில் 'நிர்மலா உங்களை மனைவியாக அடையப் போகுங் கணவன் உண்மையிலே பாக்கியசாலியாக இருப்பான். கூடிய விரைவில் உங்கள் திருமணத்தைப் பார்க்கும் பேற்றை எங்களுக்குத் தருவீர்கள் என எதிர்பார்க்கிறேன். ஆமாம் நீங்கள் ஏன் இன்னுந் திருமணஞ் செய்து கொள்ளவில்லை என்று கேள்வியோடு நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தான்.

அந்தக் கேள்வியால் அவள் சிறிது கூடப் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை, நீங்கள் கேட்டது நியாயமன கேள்விதான். ஆனால் நானும் இதே கேள்வியை உங்களிடம் திருப்பிக் கேட்கலாமல்லவா...? என்று அவள் கேட்டபோது அவன் சற்றுத் திகைத்துத்தான் போனான். அதே கேள்யக்வியைஅவள் தன்னிடந் திருப்பி கேட்பாள் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை. இதனாற் தான் கண்ணாடிமாளிகையில் சிவிப்பார்கள் கல்லெறியக் கூடாது என்று கூறுகிறார்கள் போலும் என்று நினைத்தவனாய் அதை ஒரு தக்க சந்தர்ப்பமாக நினைத்து நான் ஏற்கெனவே ஒரு பெண்ணைக் காதலித்துத் தோல்வியடைந்து விட்டேன். அதனால் திருமணஞ் செய்து கொள்வதில்லை என்ற ஒரு பிடிவாதம் என்றான்.

அவள் சிரித்தாள். பரவாயில்லையே...காதலில் மட்டுந்தான் நீங்கள் தோல்வி... வாழ்க்கையில் இல்லையே.. அதனால் வேறு நல்ல பெண்ணாகப் பார்த்துத் திருமணஞ் செய்து கொண்டிருக்கலாம் அல்லவா. ஆண்கள் என்றால் பெண்களுக்குத்தானா பஞ்சம்...தொடர்ந்து ஏதோ அர்த்தத்துடன் பேசினாள் அவள்.

'உண்மைதான்... ஆனால் ஏழைப் பெண்கள் என்றால் தான் திருமண விடயத்தில் சிறிது சிந்திக்க வேண்டும் உங்களைப் போன்ற வசதி படைத்த பெண்களுக்கு அந்தக் கவலையுமில்லையல்லவா.? அதனால் நீங்கள் திருமணஞ் செய்து கொள்ளலாம்...கொள்ள வேண்டும் என்பது என் விருப்பம்...ஏன் ஆசை என்று கூடச் சொல்லலாம்.'

'நீங்கள் கூறுவது கூட நியாயமானது தான்... ஆனால் எல்லா ஆண்களுமே உங்களைப் போல நல்லவர்களாக இருந்தால் உங்கள் பேச்சு நியாயமானதாக இருந்திருக்கும், உங்களைப்போன்ற நல்லவர்கள் இப்படிக் காதலுக்காகத் தங்கள் வாழ்நாளையே தியாகஞ் செய்யும் போது என்போன்ற பெண்களை யார் மனமுவந்து திருமணஞ்செய்து கொள்ள இருக்கிறார்கள்...? இருந்தாலும் உங்கள் ஆசையை நான் எதற்காக கெடுக்க வேண்டும். நீங்களாகவே எனக்குகந்த ஒருவரைப் பாருங்கள். என் மனதுக்குப் பிடித்தமாய் இருந்தால் மறுபேச்சின்றித் தங்கள் ஆசையை நிறைவேற்றி வைக்கிறேன்' கூறிவிட்டு குழந்தையைத் தூக்கிக் கொண்ட நிர்மலா அவன் பேச்சுக்குக் காத்திராமல் அப்பாற் சென்ற போது ரகு தனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டான்.

இப்போது அவனுக்கு ஒரு சிறு நிம்மதி ஏற்பட்டது. தனது குறையை நிர்மலாவுக்கு எடுத்துக் கூறக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டபடியால் இனிமேல் அவள் தன்னைப் பற்றி அவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்ள மாட்டாள் என்று நினைத்து மனதைத் தேற்றிக் கொண்டான். ஆயினும் நிர்மலாமீது அவனுக்கு ஒரு பரிவு ஏற்படத் தொடங்கியிருந்தது. இதுவரை பவானிக்காக மட்டும் வாழஎண்ணியிருந்த அவன் உள்ளத்தில் நிர்மலாவுக்காகவும் ஒரு துளி இடம் ஒதுக்கப்பட்டது. அவள் கூறியதுபோல போல அவளுக்கேற்ற மணவாளன் ஒருவனைத் தேடி அவளுக்குத் திருமணஞ் செய்து வைக்க வேண்டியது தனது பொறுப்பு எனக்கருதிக் கொண்டு அவனும் அவ்விடத்தை விட்டகன்றான்.

*பா.பாலேஸ்வரி*

குழந்தை உமாவும்பிறந்து இரண்டு மாதங்கள் உருண்டோடி விட்டன. பவானி வேலைக்குப் போகத் தொடங்கியிருந்தாள். அவள் வேலைக்குச் சென்று திரும்பும் வரை குழந்தையைப் பார்ப்பதற்காக ஒரு சிங்களப் பெண்ணை ஒழுங்கு செய்திருந்தான் ரகு. அநேகமாகப் பின்னேரங்களில் ரகுவின் பொழுது முழுவதும் குழந்தை உமாவுடனேயே கழிந்துவிடும்...... குழந்தை கூடத் தன் தாயைவிட ரகுவின் மேற்தான் அதிக பிரியமாக இருந்தாள். ரகு வேலை விட்டுவந்ததும் குழந்தையைத் தூக்காமல் உடை களையமாட்டான். அப்படியொரு பாசம் அவனை அந்தக் குழந்தையுடன் பிணைத்திருந்தது. பவானி கூட அந்தக் குழந்தையின் சிரிப்பில் தன் கவலைகளையெல்லாம் ஓரளவுக்கு மறந்திருந்தாள் என்றுதான் கூறவேண்டும்.

வழக்கம் போல ஒரு சாயந்தரம் வேலைவிட்டு வீடுதிரும்பிய ரகு அன்று பவானியின் தோளில் இருந்தபடி தன்னை வரவேற்கும் குழந்தையைக் காணாமல் திடுக்கிட்டான். குழந்தையின் முகத்தையோ சத்தத்தையோ காணாத அந்த இடமே அவனுக்குச் சூனியமாக இருந்தது. ஒருவேளை குழந்தைக்குத் தான் ஏதாவது சுகவீனமோ என்று பயந்தவனாய் தடிக்கும் இதயத்துடன் வீட்டுக்குள் காலடி எடுத்துவைத்தபோது யாரோ விக்கி விக்கி யழும் சத்தங்கேட்டு ஏதோ நடக்கக் கூடாதது நடந்திருக்க வேண்டும் என்று தீர்மானித்து அமைதிகச் சத்தம் வந்த திசையில் நடந்தான்.

அங்கே வெறும் சிமெந்துத் தரையில் குழந்தையைக் கிடத்திவிட்டுப் பவானி பக்கத்தில் இருந்து கேவிக் கேவியழுது கொண்டிருந்தாள். இலட்சுமியின் வீட்டுப்பக்கம் சந்தடியற்று இருந்ததால் அவர்கள் எங்கோ போயிருக்க வேண்டும் என்பது சொல்லாமலே ரகுவுக்கு புரிந்தது. அதனால் சற்றுத் தைரியம் வரப்பெற்றவனாய்க் குழந்தையின் அருகிற் சென்று குழந்தையை அப்படியே தூக்கியெடுத்துத் தன் ஆசை தீரும் வரை கொஞ்சிவிட்டுத் தோளில் போட்டுக் கொண்டான். குழந்தையின் உடல் நிலையில் ஒருவித வித்தியாசமுந் தெரியாமற் போகவே ''என்ன பவானி என்ன நடந்தது...... எதுக்கு நீ இப்படி விக்கி விக்கி அழுகிறாய்... குழந்தை நல்லாத்தானே இருக்கிறாள்...... என்று கேட்க பவானி அழுகை இன்னும் கூடிக் கொண்டே வந்தது.

அவள் அழுகிறவிதத்தைப் பார்த்துவிட்டு பவானிக்கு ஏதோ நடந்திருக்கு என்பதை ஊகித்துக் கொண்டவனாய் குழந்தையைத் தன் மார்போடு கெட்டியாக அணைத்தபடி அவள்பக்கத்தில் அமர்ந்துமறுகையால் அவள் தலையை வருடியபடி 'தங்கச்சி' என்றழைத்தான். அந்த அழைப்பு பவானியின் சோகத்தை இன்னும் கூட்டியிருக்கவேண்டும். அவள் தன் முகத்தை அவன் தோள் மேற் புதைத்து மறுகையால் குழந்தையை அணைத்தபடி மேலும் விக்கி விக்கி யழுதாள் கடைசியாக ரகு எவ்வளவோ வேண்டிக் கொண்டதன் பேரில் தன் அழுகையைச் சற்றுக் குறைத்துக் கொண்டாளே தவிர அழுத காரணத்தை மட்டுங் கூறவில்லை. அவளிடம் காரணங் கேட்டுக் களைத்த ரகுவுக்கு முதல் முதலாக அவள் மேல் ஆத்திரம் வந்தது.

தன் உயிரையே அவளுக்காக அர்ப்பணித்த பின் அவள் ஏன் தன்னை இப்படி ஒரு வேற்று மனுசனாக நினைத்து விட்டாள் எனச் சிந்தித்தபோது அவன் ஆத்திரம் எல்லை கடந்தது. பவானியே தன்னை நிராகரிக்கும் போது தான் யாருக்காக வாழ வேண்டும் என்ற வரட்டுக் கௌரவத்தில் அவள் மடிமீது குழந்தையை வளர்த்தி ''தங்கச்சி இந்தா உன் குழந்தை. எனக்குத் தெரியக் கூடாத ஒரு இரகசியம் உன் மனதில்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப்பாருங்கள்!

திருவாளர் குயுக்தி

## யார் இந்தத் தமிழ்வாணன்?

பொ. தமிழ்ச்செல்வி,
கொழும்பு-6.

கே: தமிழர்கள் சிங்களம் படிப்பதன் மூலமே இலங்கையில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்த முடியும் என்று தமிழ்வாணன் கூறியிருந்தாரே, அது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப: தெருவால் செல்லும் வைத்தியக்காரன் அலட்டிக் கொண்டுபோனால் அதற்

## தமிழர்களை சிங்களம்படிக்கச் சொன்ன தமிழ்வாணனுக்கு உங்கள் புத்திமதி என்ன?

கெல்லாமா பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியும்?

ஃ

ம. மாணிக்கவாசகம்,
இரத்மலானை.

கே: தமிழ்வாணன் என்பவர் யார்?

ப: தமிழ்நாட்டின் ஒரு சிறந்த கோமாளி. ஐந்தாம் தரப் பத்திரிகையாளர். பற்பொடி வியாபாரி. இயற்கை வைத்தியம்என்றும், சோதிடமென்றும் மக்களை ஏய்த்து 'பிஸ்நெஸ்' நடத்தும் சுயநலப்புலி. தமிழ்நாட்டில் இந்தியைத் திணிக்க முயற்சிக்கும் காங்கிரசின் கைக்கூலி!

கே: எம். ஜி. ஆரை முன்பு மக்கள் திலகம் என்றும் இந்திரன் சந்திரன் என்றும் புகழ்ந்த தமிழ்வாணன் இன்று தூற்றுவதேன்?

ப: ஒருவரைப் போற்றுவதும் 'பொருள் கொடாவிடில்' தூற்றுவதும்தான் அவரது 'பிஸ்நெஸ்'! அவரது பற்பொடிக்கு விளம்பரம்செய்ய எம். ஜி. ஆரிடம் 'போஸ்' கொடுக்கும்படி கேட்டாராம். எம். ஜி. ஆர். அதற்கு மறுத்துவிட்டாராம். அதனால் தான் தூற்றல் நடக்கிறது!

கே: தமிழர்களை சிங்களம் படிக்கும்படி கூறிய தமிழ்வாணனுக்கு நீங்கள் கூறும் ஆலோசனை என்ன?

ப: இலங்கைத் தமிழர்களின் அரசியல் நிலையைப் புரிந்துகொள்ளாமல்—இங்கு அவர்கள் நடத்தும் ஜீவமரணப்போரை தெரிந்துகொள்ளாமல்—இத்தகைய நச்சு யோசனையைத் தெரிவித்த தமிழ்வாணனுக்கு, கொஞ்சமாவது மானரோச உணர்வு இருந்தால், தமிழ் வெறிபிடித்த தலைவர் ஆதித்தனருக்கு முன்பு வெள்ளிவர்ள் பரிசு கொடுத்த தனது கையை வெட்டியெறியட்டும்!

ஃ

கே. இராமசாமி,
கொழும்பு.

கே: தமிழ்வாணனுக்கு இரண்டு தமிழ்த்தினசரிகள் கடந்த வாரம் கொடுத்த வரவேற்பைப்பார்த்தீர்களா?

ப: பார்த்தேன். பார்த்து வெட்கத்தால் கூசிக்குறுகிப் போனேன்இந்நாட்டுத்தமிழ் பத்திரிகைகளின் தரம் இவ்

## தமிழ்வாணன் கூறிய உருப்படியான கருத்து என்ன?

வளவு மட்டமாகவா போக வேண்டும்? ஒரு பத்திரிகை தமிழ்வாணனைப் பற்றி ஆசிரியத் தலையங்கமே தீட்டித் தனது தரத்தை 'கூட்டிக்' கொண்டது; அடுத்தது தலைப்புச் செய்தியாகவே தமிழ்வாணன் கட்டுரையொன்றை வெளியிட்டது. இவற்றின் மூலம் இலங்கைத் தமிழ் மக்களின் மானத்தையல்லவா இப்பத்திரிகைகள் குழிதோண்டிப் புதைத்துவிட்டன? இந்த விஷயத்தில் மட்டும்—நமக்கும் 'தினபதி'க்கும் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும்—தினபதி நடந்துகொண்ட விதம் பாராட்டத்தக்கது!

ஃ

சுப்பிரமணியம்,
யாழ்ப்பாணம்.

கே: டட்லியாரை தமிழ்வாணன் ஒரேயடியாக தூக்கி உச்சக்கொப்பில் வைத்து விட்டாரே!

ப: ஆமாம், அப்போது தானே இலங்கையில் அவரது வியாபாரம் தடங்கலின்றி நடைபெறும்!

ஃ

மா. குலேந்திரன்,
நல்லூர்.

கே: நான் யார்? என்று ஒரு கட்டுரை எழுதியிருக்கிறேன். தமிழ் தினசரியொன்றுக்கு அனுப்பினால் பிரசுரிப்பார்களா?

ப: கண்டிப்பாக—முன் பக்கத்தில் தலைப்பு செய்தியாகவே பிரசுரிப்பார்கள்! கஞ்சல் குப்பைகளினதும் கழிசடைகளினதும் கட்டுரைகளையும் பேட்டிகளையும் பிரசுரிக்கும் நம்நாட்டு தமிழ் தினசரிகள் உங்கள் கட்டுரையை மட்டும் புறக்கணித்துவிடக் காரணமில்லையே!

விஜயேந்திரன்,
தெகிவளை.

கே: இலங்கைக்கு வந்திருந்த தமிழ்வாணன் கூறிய உருப்படியானகருத்து என்ன

ப: இலங்கைவாழ் தமிழர்களை அனைவரும் ஒரே தலைவனின் கீழ் ஒன்றுபடவேண்டும்; இலங்கைத் தமிழர்களை வழி நடத்தும் ஆற்றலும் தகுதியும் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களுக்கு மட்டுமே உண்டு என்று கூறியிருந்தார்! இது ஒன்றுதான் தமிழ்வாணன் கூறிய சிறந்த கருத்தாகும்.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு—12

## வாசகர் கருத்து

வாயால் மட்டும் தேசிய ஐக்கியம்என்று பசப்புமொழி பேசும் பிரதமருக்கு தங்கள் சென்றவார ஆசிரியத் தலையங்கம் சரியான சூடு!

—க. இளையதம்பி
யாழ்ப்பாணம்.

●

அண்ணு சாவிகம் எங்கே? ஏன்தான இப்படி எங்களை அடிக்கடி ஏமாற்றுகிறீர்களோ?

—எஸ். முருகேசு
கொழும்பு.

●

அமிர்தலிங்கத்தாரின் டைம்ஸ் பேட்டியை தமிழில் தந்ததற்கு நன்றி.

—ஜே. எட்வேட்
கொழும்பு-6.

●

அரைச் சபாநாயகருக்கு சரியான 'அடி' கொடுத்துள்ளீர்கள்.

—மு. இராமலிங்கம்
உடுப்பிட்டி.

●

மாநாட்டுக்கட்டுரை உண்மையிலேயே எழுச்சியை ஏற்படுத்துகிறது!

—க. சிதம்பரநாதன்
திருமலை.

●

சிறுகதையை ஒரேயடியாகச் சுதந்திரனில் புறக்கணித்துவிட்டீர்களே!

—ரமணி
மட்டக்குளி.

* புறக்கணிக்கவில்லை. இடமின்மையால் இடம்பெறவில்லை. —ஆர்.

# வளரும் எழுத்தாளர்கள் (7)

மட்டக்களப்பு முகத்துவாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரி இவர். எஸ். எஸ். ஸி. வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும்போது தான் இவருக்கு கவிதை எழுதவேண்டும் என்று ஆர்வம் எழுந்தது. எதற்கெடுத்தாலும் கவிதை கவிதையாகவே கிறுக்கித் தள்ளினர். அந்தநேரம் பத்திரிகைகளுக்கு அனுப்பவேண்டுமென்று இவர் நினைத்ததேயில்லையாம். நண்பர்களைக் கிண்டல் செய்தே பாடல்களை எழுதிக் கொண்டிருந்தாராம் அதிகமாக இவருடைய நண்பர்கள் ''போடா நீயும் உன் பாட்டும்'' என்று சொன்னர்களே தவிர இவருக்கு கவிதை படைக்கக் கூடிய உற்சாகத்தைத் தரவேயில்லையாம்.

''ஏன் எழுதுகிறேன்? எதற்காக எழுதுகிறேன்? என்பது எனக்கே தெரியாமல் சுத்த பைத்தியம் போல் எதையாவது எழுதிக்கொண்டேயிருந்தேன். ஒரு நாள், தினகரன் நடாத்திய புதன் மலரில் ஈ. வே. ரா. பெரியாரைப்பற்றிய ஒரு கவிதைப் போட்டியில் பங்குபற்றி இரண்டாவது பரிசையும் தட்டிக்கொண்டேன். அன்றிலிருந்து என்னுடைய நண்பர்களுக்கு என்மேல் கொஞ்சம் பற்று ஏற்பட்டதோ என்னவோ அடிக்கடி வெளிவரும் என் கவிதைகளைப் பாராட்டிப் பேசுவார்கள்'' என்கிருர் இவர்.

கவிதையில் அன்றிருந்து இவருக்கேற்பட்ட பைத்தியம் இன்றும் இவரை விட்டுப் போகவில்லை. இறக்கின்ற கடைசி மூச்சுவரை கவிதை எழுதிவிட்டே கண்ணை மூடவேண்டும் என்று இவரதுமனம் உறுதி பூண்டிருக்கிறது. கலைவாணியின் அருளால் அதைச் செய்து முடிப்பேன் என்கிருர் இவர்.



கவிதைகளை அனேகமாக ஈழத்திலிருந்து வெளிவரும் அத்தனை பத்திரிகைகளும் பிரசுரித்திருக்கின்றன. இந்தியாவிலிருந்து வரும் 'ராணி' பத்திரிகையும் இவருடைய குழந்தைக் கவிதை யொன்றைப் பிரசுரித்திருக்கிறது.

வீரகேசரியிலும், சுதந்திரனிலும் பல கிராமிய இலக்கியக் கட்டுரைகளை எழுதியிருக்கிருர். கவிதையின் மேல் தனக்குள்ள ஆசையும், பற்றும் ஆர்வமும் சிறுகதையில், கட்டுரையில் அவ்வளவாக இல்லை என்கிருர்.

''என்னை எழுத்தாளர்களின் மத்தில் ஓரளவுக்காவது அறிமுகப்படுத்திய பெருமை சுதந்திரனையே சாரும். அவ்வப்போது என்னுடைய குழந்தைக் கவிதைகளையும் கிராமியக் கட்டுரைகளையும் பிரசுரித்து என்னை இன்னுமின்னும் எழுதுவதற்கு ஆர்வத்தைத் தூண்டிக்கொண்டிருப்பது சுதந்திரனே என்று பெருமையுடன் தெரிவித்தார்.

## செ. குணரத்தினம்

ஒரு குறிப்பிட்ட எழுத்தாளர்களது படைப்புகளை நல்லதோ, கெட்டதோ, ஒரு சில பத்திரிகைகள் வருஷமெல்லாம் பிரசுரித்துக் கொண்டிருப்பதும், ஒரு சில கவிதைகளைப் பத்திரிகைகளில் எழுதிவிட்டு, நான் பெரிய கவிஞன், எழுத்தாளன் என்று மக்களை ஏமாற்றித் திரிவோரின் போக்கும் இவருக்கு பிடிக்கவே பிடிக்காது.

ஈழத்து எழுத்தாளர்களில் 'நவம்,' 'அன்புமணி,' 'உதயணன்' போன்ருரது படைப்புகளும், கவிஞர்களில் 'இராஜபாரதி; காசி ஆனந்தன் போன்ருரது கவிதைகளைகளும் இவருக்கு மிகவும் பிடிக்கும்.

—மகேஸ்

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்'

போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# இன ஒழிப்பு நடவடிக்கை!

தமிழரசுக் கட்சியின் 11-வது மாநில மாநாட்டுக்குப் பின் சென்ற வாரம் யாழ்ப்பாணத்தில் முதன் முதலாகக் கூடிய தமிழரசுப் பொதுச்சபை ஒரு முக்கிய தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. அரசாங்கத்தின் கல்விச் சட்டத்துக்கு முரணாக வட பகுதியில் கம்யூனிஸ்டுகளால் நிறுவப்பட்டுள்ள மூன்று பௌத்த சிங்களப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதையும் அப்பாடசாலைகளுக்குப் பௌத்த சிங்கள ஆசிரியர்கள் தென்னிலங்கையிலிருந்து அனுப்பப்படுவதையும் கடுமையாக எதிர்ப்பதென்பதுதான் அத்தீர்மானம்.

அரசாங்கம் பொறுப்பேற்கப் போவதாக அறிவித்துள்ள மூன்று பாடசாலைகளும், பௌத்த சிங்கள பாடசாலைகள் என்று கூறப்பட்டாலும், இன்று அப்பாடசாலைகளில் கல்வி பயிலுபவர்கள் அனைவரும் தமிழ்ப் பிள்ளைகள். கல்வியூட்டுபவர்கள் தமிழ் ஆசிரியர்கள். கல்வியூட்டும் மொழி தமிழ். அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் தான் இப்பாடசாலைகள் உண்மையிலே பௌத்த சிங்களப் பாடசாலைகளாகப் போகின்றன. அப்பாடசாலைகளில் கல்வி போதித்து வந்த தமிழ் ஆசிரியர்கள் வேலை இழக்கப் போகிறார்கள். அவர்களது இடங்களுக்கு தென்னிலங்கையிலிருந்து சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்படவிருக்கிறார்கள். தமிழ்ப் பிள்ளைகளிடம் போதனைமொழியாக சிங்களம் திணிக்கப்படப் போகிறது.

இப்பிரச்சினை இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை மிக முக்கியத்துவம் வாய்ந்தது; சிறிது கூட விட்டுக் கொடுக்க முடியாதது என்பதில் துளியும் ஐயமில்லை.

வடக்கிலே சிங்கள பௌத்த பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுச் சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதைத் தமிழினம் அனுமதித்தால் சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம் நுழைவதற்கு வேலிக் கூடாகஒரு 'பொட்டு' ஏற்படுத்த வழியமைக்கிறோம் என்பது தான் அர்த்தம். இது ஒரு சின்னப் 'பொட்டு'த் தானே என்று இன்று அலட்சியப் படுத்துவோமானால் நாளடைவில் 'பொட்டு' பெரிதாகி இறுதியில் வேலியே இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும். சிங்கள பௌத்த வெள்ளம் தலைக்குமேல் பாயத் தொடங்கிவிடும். நூற்றுக்கு நூறு வீதம் தமிழ் நாட்டில் காணும் இடமெல்லாம் புத்த விகாரங்களும், புத்தர் சிலைகளும் தோன்றத் தொடங்கி விடும். கூடவே சிங்கள ஏகாதிபத்தியமும் மெல்ல மெல்ல நுழைந்து விடும்.

உண்மையில் இந்நாட்டில் வாழும் தொண்ணூறு வீதமான சிங்கள மக்களினதும் அவர்களது தலைவர்களதும் ஒரே நோக்கம், இந்நாட்டில் சிறுபான்மை இனங்களை இன மாற்றத்தின் மூலமும், மதமாற்றத்தின் மூலமும் அழித்தொழித்துப் பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தைக் கட்டி எழுப்புவதுதான் என்பதை அவர்களது பேச்சுக்களும் நடவடிக்கைகளும் பிரத்தியட்சமாக நிரூபித்து வருகின்றன.

இந்நாட்டுச் சிங்களக் கட்சிகள் அனைத்தும் தமிழினத்தின் தனித் தன்மையை அழித்து ஒழித்து விடுவதன் மூலமே 'ஒருமைப்பாடு' காண முயல்கின்றன. கிழக்கே திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்களை நடத்திப் பெருந்தொகையான தமிழ்ப் பிரதேசங்களை அன்று அபகரித்தது யூ. என். பி. இன்றும் அதே யூ என், பி. தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த சிலரை ஏமாற்றித் தனது கைக்குள் போட்டுக் கொண்டு வடக்கே பௌத்த விகாரைகளையும் சிங்கள பௌத்த பாடசாலைகளையும் நிறுவி அதன் மூலம் தமிழ்ப் பிரதேசத்தின் பழைய வரலாற்றையும் தமிழினத்தின் தனித் தன்மையையும் சிறுகச் சிறுக அழித்துவிடச் சதித்திட்டம் தீட்டியுள்ளது.

ஆட்சியாளர்கள், இதை மறுப்பார்களானால் மருந்துக்குத் தானும் பௌத்தர்கள் எவருமேயில்லாத கரவெட்டியிலும், பத்த மேனியிலும், அல்வாயிலும் சிங்களப் பௌத்த பாடசாலைகளை நிறுவ வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டதென்று கேட்க விரும்புகிறோம்.

கம்யூனிஸ்ட்டுகள், நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காகவும் தமிழினத்தை பிரித்து அழித்தொழிக்கும் நச்செண்ணத்துடனும் நிறுவியுள்ள இப்பாடசாலைகளை பொறுப்பேற்க 'தேசிய ஒற்றுமை' பேசும் டட்லி அரசாங்கம் முன்வந்திருப்பது நமக்கு ஆச்சரியத்தை அளிக்கவில்லை. ஏனெனில் உதட்டளவில் 'தேசியம்' பேசினாலும் உள்ளத்தில் தமிழினத்தை மோதவிட்டு அழிப்பதுதான் இந்த அரசாங்கத்தின் முற்றுமுழுதான நோக்கமாகும்.

ஆனால், பிரதமரிடம் நாம் கேட்க விரும்புவது இதுதான், 1960ம் ஆண்டு பாடசாலைகளை அரசாங்கம் பொறுப் பேற்ற சமயத்தில் கொண்டு வரப்பட்ட கல்விச்சட்டத்துக்கு முரணாக — வடபகுதியில் சட்டவிரோதமாக நிறுவப்பட்டுள்ள 3 பௌத்த சிங்கள பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப் பேற்க முடிவு செய்தால் —இதுவரை பொறுப்பேற்கப்படாமலிருக்கும் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ, கத்தோலிக்க பாடசாலைகளையும் உடனடியாகப் பொறுப்பேற்க அரசாங்கம் தயாரா?

சிங்கள பௌத்தம் என்றவுடன் ஒரு நியாயம்—இந்துக்களுக்கும் இஸ்லாமியருக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இன்னொரு நியாயமா? வடபகுதியிலுள்ள சிங்கள பௌத்த பாடசாலைகளை மட்டும் பொறுப்பேற்றுக் கொண்டு ஏனைய மதத்தவர்களின் பாடசாலைகளை பொறுப்பேற்க மறுப்பதொன்றே தமிழினத்தை யொழித்துக்கட்ட வகுக்கப்பட்ட சூழ்ச்சி இது என்பதை உணர்த்தவில்லையா? இக்கேள்விகளுக்கு மழுப்பலின்றி நேரடியான பதிலை பிரதமரிடமிருந்து இந்நாட்டிலுள்ள சிறுபான்மை மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஒவ்வொரு பிள்ளைக்கும் அதனதன் தாய்மொழியிலேயே கல்வியூட்டப்பட வேண்டும் என்ற கொள்கையை ஒப்புக் கொண்டுள்ள அரசாங்கம் இன்று அக்கொள்கையைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டுத் தமிழ்ப் பிள்ளைகளுக்கும் சிங்களத்தைப் போதனா மொழியாகத் திணிக்க முயற்சிப்பது என்ன நியாயம்? இது தமிழ்ப் பிள்ளைகளைச் சிங்களவர்களாக்கும் இன ஒழிப்பு நடவடிக்கையன்றி வேறென்ன?

தமிழ் பேசும் மக்களினதும் அவர்களது பிரதிநிதித்துவ ஸ்தாபனமான தமிழரசுக் கட்சியினதும் கடுமையான எதிர்ப்பை அலட்சியம் செய்துவிட்டு பௌத்த சிங்களப் பாடசாலைகளைப் பொறுப்பேற்று சிங்கள ஆசிரியர்களை வடக்கே அரசாங்கம் அனுப்புமானால் அதன் விளைவு பாரதூரமானதாக இருக்கும் என்று ஆட்சியாளரை எச்சரிக்க விரும்புகிறோம். தமிழுரிமைப் போரில் குதிக்க வேண்டும் என்று துடியாய்த் துடிக்கும் தமிழ் இளைஞர்களுக்கு பிரதமரே ஒரு சந்தர்ப்பத்தை வழங்க விரும்பினால் அதைத் தடுக்க யாரால் முடியும்?

---

மூணுச்சிவசிதம்பரத்தின்

முடக்குவாதங்கள்—2

# பரத்தை போடும் பத்தினி வேடம்

தமிழரசுக்கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேறியதற்கு காரணமாகக் காட்டியுள்ள மூன்று காரணங்களும் அற்பமானவையென்றும், அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதற்கு இம் மூன்றுகாரணங்களும் போதுமானவையல்லவென்றும் தமது கட்சியின் மேதினக் கூட்டத்தில் மூணுச் சிவசிதம்பரம் விளாசியிருக்கிறார்.

மூணுச் சிதசிதம்பரத்தின் இக் கூற்றைப் படித்தபோது கோப்பாய்க் கோமான் அமரர் வன்னியசிங்கம் அடிக்கடி கூறும் ஒரு பழமொழிதான் நமது நினைவுக்கு வருகிறது. 'நக்கிறநாய்க்குசெக்கென்ன சிவலிங்கமென்ன' என்பது தான் அப்பழமொழியாகும்.

தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு எந்தக் காலத்திலும் யூ.என். பி.யை விட்டுப்பிரிவதற்கு சரியான காரணம்பிறக்கவே முடியாது. ஏனெனில் யூ. என். பி யின் காலை நக்கிப் பிழைப்பதே தமிழ் காங்கிரசின் அடிப்படைக் கொள்கை. தமிழினத்தை சிங்கள முதலாளித்துவ வாதிகளுக்கு என்றென்றும் அடிமையாக்கி வைத்துக் கொள்வதே பூஷ்வா மனப்பான்மை கொண்ட தமிழ் காங்கிரசின் பிரத்தியட்ச நிலையென்பதை எவருமே மறுக்க முடியாது. இதன காரணமாகத்தான், 1965ம் ஆண்டுத் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டவுடன், கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழினத்தினுரிமைகளை வென்றெடுக்கவேண்டுமென்ற எவ்வித அக்கறையுமின்றி, டட்லியின் கரங்களைப் பலப்படுத்துவோம் என்று யாழ்ப்பாணத்திலே நின்றுகொண்டு உரக்கக் கூவினார் திரு.பொன்னம்பலம்.

ஆகவே 1965ம் ஆண்டு தேசிய ஆரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர், கடந்த 4 ஆண்டுகாலத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு சில உரிமைகளாவது கிடைத்திருக்கிறதென்றால், அவற்றை தமது சாதனையென்று ஒரு துளியாவது பாத்தியதை கொண்டாடுவதற்கு தமிழ் காங்கிரசுக்கு உரிமை கிடையாது.

தமிழரசுக்கட்சி டட்லி சேனநாயகாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி, சில பல வாக்குறுதிகள் பெற்றுக் கொண்டு, அதன்பின் ஆட்சியமைக்க கை கொடுத்து, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி பிரதமரைப் பின்னும் முன்னும் நச்சரித்து, கல்லிலே நாருரித்த படியால்தான் தமிழினத்துக்கு சில உரிமைகள் கிடைத்திருக்கின்றன. இந்த உரிமைகளைக் கூட யூ. என். பி. யிடமிருந்து வென்றெடுக்க முடியாமல் தடுப்பதற்கு தமிழ் காங்கிரஸ்

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

ஆடிய கபட நாடகங்களைத் தமிழ் மக்கள் அறிவார்கள்.

தமிழ் பேசும் மக்கள் மிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்ததும் தமிழ் பிரதேசங்களுக்கு ஓரளவு சுயாட்சியளிக்கக் கூடியதுமான மாவட்டசபை மசோதாவுக்கு எதிராக படுகேவலமாக ஆர். ஜி. சேனநாயகா, ஹேமா பசநாயகா. போன்ற சிங்கள இனவெறியர்களுடனும் கூட்டுக்கட்சிகளுடனும், பௌத்த பிக்குகளுடனும் இணைந்து நின்று குரலெழுப்பி, அம்மசோதாவைக் கை விடுவதற்கான சூழ்நிலையை பிரதமருக்கு ஏற்படுத்திக்கொடுத்து ''நல்ல பிள்ளைகளாக'' நடந்து கொண்டவர்கள் தமிழ் காங்கிரஸ் எம்.பிக்கள் என்பதை அறிவுபடைத்த தமிழ் மக்கள் அறிவார்கள்.

இவ்வளவு பெரிய துரோகத்தையும் செய்து விட்டு— இரவு முழுவதும் பலருக்கு உடலைவிற்றுவிட்டு பொழுது விடிந்ததும் பதிவிரதை வேடம் போடும் பரத்தை போல—அரசியலில் இன்று பத்தினிவேடம் போடப் பார்க்கிறது தமிழ் காங்கிரஸ். எவ்வளவு கச்சிதமாக வேடம்போட்டாலும் தனது அரசியல் பரத்தைத்தனத்தைக் மறைத்துவிட முடியாது என்பது மட்டும் உறுதி.

மாவட்டசபை வந்திருந்தால், தமிழர்கள் அடிமைகளாக வாழ நேரிட்டிருக்குமென்றும் 22 மாவட்டங்களிலும் சிங்களம் சுலபமாகக் கோலோச்சியிருக்குமென்றும் வடக்கு, கிழக்கிலும், சிங்களமே நிர்வாக மொழியாகியிருக்குமென்றும் உடுப்பிட்டியார் புழுகியிருக்கிறார்.

இலங்கை முழுவதும் தனிச்சிங்களமே கோலோச்ச வேண்டுமென்பதும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களவர்களைப் பெருமளவில் குடியேற்றி, அம்மாகாணங்களை தமிழ் பேசும்மக்களிடமிருந்து கைப்பற்ற வேண்டுமென்பதும், இந்நாட்டில் ஒரேமொழி, ஒரே இனம், மதமே இருக்க வேண்டுமென்பதுமே ஆர். ஜி. சேனநாயகா, ஹேமாபசநாயக்கா பன்னசீகதேரோ, போன்றவர்களினதும் கூட்டுக்கட்சிகளினதும், அடிப்படைக் கொள்கையென்பதை எவருமே மறுக்க முடியாது.

நாடு முழுவதும் சிங்கள மொழி—சிங்கள இனம் பௌத்த மதம்—என்ற தங்கள் நோக்கம் மாவட்டசபைகள் நிறுவப்பட்டால் பொடிப் பொடியாகிவிடும் என்பதனால் தான் மாவட்டசபை மசோதாவுக்கு எதிராக மேலே கூறப்பட்ட சிங்கள இனவெறிச் சக்திகள் கிளர்ந்தெழுந்தன. சிங்கள மக்களை தூண்டி விட்டன. மாவட்டசபை ஏற்பட்டால் வடக்கும், கிழக்கும் தமிழ் இராச்சியமாகி விடுமென்று கூடப் பிரச்சாரம் செய்யப்பட்டன.

மூணுச் சிவசிதம்பரத்தின் கூற்றின்படி, மாவட்டசபைகள் மூலம், தமிழினத்தை சுலபமாக அழித்துவிடமுடியுமென்று கண்டால் மாவட்டசபை மசோதாவுக்கு எதிராக தமிழர் எதிர்ப்பு சக்திகள் கிளர்ந்தெழுந்திருக்க முடியாது.

மாவட்ட சபைகள் மசோதா தமிழினத்தின் மரணசாசனம் என்ற உடுப்பிட்டியாரின் கூற்று உண்மையானல் அம்மரண சாசனத்தை தமிழினமே மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள விரும்பிய போது, தமிழினத்தை பூண்டோடு அழிக்கும் ஆசை கொண்ட சிங்கள இனவெறியர்கள் எதற்காக எதிர்க்கப் போகிறார்கள் என்பதையும் உடுப்பிட்டியார்சற்றேவிளக்குவாரா? தமிழ் காங்கிரஸ் காரர்களை விட மாவட்டசபை மசோதாவை எதிர்த்த சிங்களத் தலைவர்கள் சற்றும் அறிவிற் குறைந்தவர்களல்லர்.

இன்று மாவட்டசபை வந்திருந்தால் தமிழினம் அழிந்திருக்கும் என்றி கூறும்மூணுச் சிவசிதம்பரம், திருமதி சிறிமாவின் ஆட்சிக் காலத்தில் மாவட்டசபை மசோதாவைக் கொண்டு வரும்படி பாராளுமன்றத்தில் பகிரங்கமாக கூறினாரே, அப்போது ஏன் இந்த ஞானோதயம் அவருக்கு வரவில்லை?

கல்வி சம்பந்தப்பட்டசகல அதிகாரங்களும் மாவட்ட

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜூன் 5 முதல் ஏழு நாட்களுக்கு

# ஈழத் தமிழகமெங்கும் தமிழியக்க எழுச்சி வாரம்

## சிங்கள ஆசிரியர் திணிப்புக்கு எதிராக நடவடிக்கை!

## அமைச்சர்களுக்கு ஆடம்பர வரவேற்புகள் வேண்டாம்!

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு டட்லி அரசாங்கத்தின் அமைச்சர்கள் இனிமேல் விஜயம் செய்யும் போது, அவர்களுக்கு அளிக்கப்படும் ஆடம்பர வரவேற்புகளை தமிழரசுக்கட்சி முற்றாக பகிஷ்கரிக்கும். நேரடிநடவடிக்கையில் கட்சி இறங்கும் வரையும் அமைச்சர்களின் உத்தியோக பூர்வ விஜயத்தின்போது மட்டும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த அந்தந்தத் தொகுதி பா. உ. கள் கலந்து கொண்டு தொகுதி மக்களின் தேவைகளை எடுத்துக்கூறுவார்கள். அதேநேரத்தில் அடிமைமனப்பான்மையை எடுத்துக்காட்டும் வகையில் அமைச்சர்களுக்கு எவ்வித ஆடம்பர தமாஷா வரவேற்புக்களையும் அளிக்கவேண்டாமென தமிழ்பேசும் மக்களையும் தமிழரசுக்கட்சி கேட்டுக் கொள்ளுகிறது.

தமிழரசுக்கட்சியின் பொதுச் சபைக் கூட்டம் யாழ்ப்பாணத்திலுள்ள கட்சிப்பணிமனையில் இம்மாதம் 8ம் திகதி கூடியபோது மேற்கண்டமுடிவுகள் எடுக்கப்பட்டன.

தமிழரசுக்கட்சிப் பொதுச் சபை நிறைவேற்றியுள்ள ஏனைய முக்கிய தீர்மானங்கள் வருமாறு:—

### தமிழரசுப் பொதுச்சபை முடிவுகள்

#### தமிழியக்க வாரம்

★ தமிழ் மொழிச் சட்ட விதிகளை அமுல்நடத்தச்செய்வதற்கு அரசாங்கத்தை வலியுறுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், தமிழ் பேசும் மக்கள் தமது கருமங்களைத் தமிழிலேயே ஆற்ற வேண்டுமென்று கோரும் பிரசாரத்தைத் தீவிரமாக நடத்தும் வகையிலும் ஜூன் 5ம் திகதி தொடக்கம் தமிழ் இயக்கஎழுச்சிவாரம்கொண்டாடுவது.

#### எதிர்ப்பு நடவடிக்கை

★ 1960ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட கல்வி மசோதாவுக்கு மாறாக யாழ்ப்பாணத்தில் மூன்று பௌத்த சிங்களப் பாடசாலைகளை அங்கீகரிக்க அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கையை இப் பொதுச்சபை வன்மையாகக் கண்டிக்கிறது. அப்பாடசாலைகளை ஆரம்பித்த ஆசிரியர்கள் ஆசிரிய சேவையில் சேர்க்கப்படாமல் இருக்கும் அதே நேரத்தில் மத அடிப்படையில் பௌத்த மத மாற்றத்தை நோக்கமாகக் கொண்டு சிங்கள பௌத்த ஆசிரியர்களை இப் பாடசாலைகளுக்கு நியமிக்கும் அரசாங்கத்தின் திட்டத்தையும் எதிர்த்து நடவடிக்கை எடுப்பது;

#### தமிழ் படங்கள்

★ தென்னிலங்கையின் சில பகுதிகளில் தமிழ்ப்படங்கள் காட்டப்படும் தியேட்டர்களுக்கு காடையர்களின் எதிர்ப்பினால் தமிழ்ப் படங்களைக் காட்டமுடியாது நிறுத்தவேண்டிய ஆபத்து ஏற்பட்டுள்ளதாக கிடைத்த செய்திகள் பொதுச்சபையில் ஆராயப்பட்டன. இந்த நிலைமையை உடனடியாகநிறுத்தி இலங்கையின் எந்தப்பாகத்திலும் தமிழ் பேசும் மக்கள் எந்தவிதமான தடையுமின்றி தமிழ்ப் படங்களைப் பார்க்கக்கூடியதாக சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டவேண்டியது அரசாங்கத்தின் கடமையென்பதைப் பொதுச்சபை சுட்டிக்காட்டி இப்படியான இனத்துவேஷ நடவடிக்கைகளுக்கு உற்சாகமளிக்கும்வகையில் அரசாங்கம் தமிழ்ப் படங்களுக்குப் பாதகமான எந்த நடவடிக்கையையும் எடுப்பதை உடனடியாகக் கைவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்வது.

---

# தனிப் பெருந் தலைவரின் தடுமாற்றம்

தனிப்பெருந் தலைவர் போது அடுத்த தேர்தலில் போட்டியிடதொகுதிதேடித் தடுமாறுகிருராம். அவரின் சமீபகாலத்து நடவடிக்கைகளை உற்று நோக்கினுல் இது நன்கு புலப்படும்.

சென்ற தேர்தலில் யாழ்ப்பாணத் தொகுதியில் விட்ட தகிடு தத்தங்கள் மாயாசால வித்தைகள் இனி வரும் தேர்தலிலும் செல்லுபடியாகுமா என்ற சந்தேகம் தோன்றி அவரை அல்லும் பகலும் வாட்டி வதைத்துக் கொண்டேயிருக்கிறது. கடந்ததேர்தலின் போது செய்த பொய்ப்பிரசாரங்கள் எண்ணிலடங்காதவை.

(1) தமிழரசுக் கட்சி வெற்றி பெற்ருல் சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேரும். அப்படி அவர்கள் கூட்டுச் சேர்ந்து அரசாங்கம் அமைத்தால் கிறிஸ்தவ சமயம் அழிந்துவிடும்.

(2) ஐ. தே. கட்சிதான் தமிழரின் உரிமைகளைத் தரக்கூடியது.

(3) முஸ்லீம்களின் இரட்சகன் நான். எனவே அவர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பேன்,

(4) நான் வெற்றிபெற்ருல் தமிழர்களின் உரிமைகளை மூன்று மாதத்தில் பெற்றுத்தருவேன். இல்லாவிடில் என் பதவியைத் துறப்பேன்!

இப்படி பல பொய்யும் புரட்டும் புனைந்து கூறியும் பண முதலைகளின் ஊழல் வேட்டைகளினுலும் ஒருசில மத பீடங்களின் தவருன ஒத்துழைப்பினுலும் வெற்றி பெற்ற இந்த தனிப் பெருந் தலைவர், அடுத்து வரும்

### 'உண்மை விளம்பி'

பொதுத் தேர்தலில் செய்வதென்ன என்று தெரியாது திணறுகிருர்.

முஸ்லீம் இடுகாட்டுவிடயத்தில் வழிதவறிச் சென்று மூக்குடைபட்ட இவர் அவர்கள் முகத்தில் விழிக்க முடியாமலும், மத விடயமாக கிறிஸ்தவரிடம் சென்று பொய்கூறியமையினுல் அவர்களிடம்செல்லமுடியாமலும் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிருர்.

இந்த நிலையிலும் ஒரு நப்பாசை! யாழ்ப்பாணத் தொகுதியை விட்டு நல்லூரில் கால்வைத்தால் என்ன என்ற ஆசைதான் அது;

ஆசை வெட்கமறியாது என்பார்கள். அதுபோல் சீடன் கத்திக்களைத்த மட்டமான மதவாதத்தை கிளப்பி நல்லூரில் வெற்றிபெறலாம் என்ற எண்ணம். இதனுல் பல இந்து மத சங்கங்களில் அங்கம் வகிக்கும் பெரிய புள்ளிகளையும், வாலிபர்களையும், அணுகி சதியாலோசனைகள் நடத்தி வந்தார்.

ஆனுல், விடயம் சீடன் காதுக்கு எட்டிவிட்டது. அவரா சும்மா இருப்பார்? இதோ விட்டேனுபார் என்று எண்ணி, அடுத்த பொதுத் தேர்தலில் த. கா. கட்சியில் நல்லூர் தொகுதியில் போட்டியிடப் போவதாக பத்திரிகையில் அறிக்கை விட்டார்.

இந்த அறிக்கை மூலம் குருவை முந்திக்கொண்டார்; குருவிற்கு பட்டை நாமம் தீட்டி விட்டார். செய்வதறியாது திகைத்த குரு எப்படியோசமாளித்துக்கொண்டு தேர்தல் தொகுதிகளையும் வேட்பாளர் பெயர்களையும் வெளியிட்டுள்ளார்.

எப்படியோ சீடனின் பெயரும் வேட்பாளர் பட்டியலிலிடம் பெற்றுவிட்டது. ஆயினும் தேர்தலுக்கு முன்னுள்ள இடைக்காலத்தில்யாது நடக்குமோ யார் கண்டார்?

ஒன்று. இவர்கள் விடயம் ஊரறிந்ததாயிற்றே! ஊரை அடித்து உலையில் போட்டவர்கள் பொது வாழ்வில் ஈடுபட்டு பொது மக்கள்முன் வருவதற்கு எண்ணுகிருர்களே. இதுதான் கேவலம்.

மானம், ரோசம், சூடு, சுரணை கடுகளவாவுதல் இருந்தால், நானும் மனிதன் மக்கள் தலைவனல்ல; தொண்டன் என்று கூறிக் கொண்டு தேர்தலில் போட்டியிடமுன் வருவார்களா?

கேவலம் அரசியல் இவர்கள் எண்ணுமளவுக்கு இழிநிலைக்குப் போய்விட்டது என்று எண்ணுகிருர்களா? அல்லது தமிழ் மக்கள், இவர்களின் கடந்தகால வரலாற்றை மறந்திருப்பார்கள் என்று எண்ணமா?

### குருவை ஏமாற்றினுர் சீடன்!

அவமானம்! அரசியலறம் இனஉணர்ச்சி, தன்மானம் இவை சிறிதேனும் இல்லாதவர்கள், மனிதத் தன்மை, மனிதாபிமானம் இவற்றையோ, அரசியல் அறம், பண்பு இவற்றையோ எப்படி அறிந்திருக்க முடியும்? நாம் தான் எப்படி எதிர்பார்க்க முடியும்?

---

## இ. த. அ. க. வட்டுக்கோட்டை கிளை

3-3-69ல் நடந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைக் கிளைக் கூட்டம் மேற்படி கிளைக் காரியாலயத்தில் நடைபெற்றது. குழு உத்தியோகஸ்தர் [illegible] வருமாறு:—

தலைவர்: திரு. ஏ. இ. இரத்தினசாமி ஜே.பி. உபதலைவர்: திரு. ச. சி. கந்தசாமி, காரியதரிசி: திரு. ச. வி. நடராஜா, உபகாரியதரிசி சோ. நரசிங்கம், நிதியாளர்: செ. இலகுப்பிள்ளை.

கூட்டத்தில் அமரர் அறிஞர் அண்ணுவிற்கு அஞ்சலி செலுத்தி அவரது பெருமைகளையும்திறமைகளையும் அவர் உரிமை பெற்றுக்கொடுத்த வெற்றியினைப்பற்றியும் பலர் உரையாற்றினுர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க.வின் புதிய பொதுச்செயலாளர் யார்

# நெடுஞ்செழியனா கருணாநிதி



அண்மையில் நடைபெற்று முடிந்த தமிழ் நாட்டு நகரசபைத் தேர்தல்களில் தமிழ் நாட்டின் ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் தோழமைக் கட்சிகளும் வியப் பூட்டும் வெற்றிகளைப் பெற்றுள்ளன. தமிழ் நாட்டு மக்களிடையே தி. மு. க. ஆட்சி செல்வாக்கிழந்து வருவதாக தமிழ் நாட்டு காங்கிரஸ் தலைவர்கள் நடத்தி வந்த பிரசாரம் உண்மைக்குப் புறம்பானது என்பதையும், தமிழ் நாட்டு மக்களின் இதயங்களிலே கழகத்திற்கு தன்னிகரற்ற செல்வாக்கு இருந்து வருகிறது என்பதையும் நகரசபைத் தேர்தல் முடிவுகள் அகில உலகுக்கும் உணர்த்தி விட்டன.

தமிழ் நாட்டில் தி. மு. க. ஆட்சி ஏற்பட்ட பின்னர், சட்டமும் ஒழுங்கும் கெட்டு விட்டன என்று காங்கிரஸ்காரர்கள் நடத்தி வந்த பிரசாரத்தை முறியடிக்கும் தோரணையில், தி. மு. க. ஆட்சியையே நாம் விரும்புகிறோம் என்பதை ஐயத்துக்கு இடமின்றி அறிவித்துவிட்டார்கள் வாக்காளர்கள்.

## 50 வருடம் சென்றாலும்...

தேர்தல் நடைபெற்ற 73 நகரசபைகளில் 19 நகரசபைகளில் தி. மு. க. தனித்து பரிபூரண பெரும் பான்மையை ஈட்டியுள்ளது. 14 நகரசபைகளை தி. மு. க. கூட்டணி கைப்பற்றியிருக்கிறது. 32 நகரசபைகளில் எந்தக் கட்சிக்குமே பெரும் பான்மை கிடைக்கவில்லை. இதே நேரத்தில் ஆக 8 நகரசபைகளை மாத்திரமே காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது.

நகரசபைத் தேர்தல்களில் மக்கள் அளித்துள்ள தீர்ப்புகளைப் பார்க்கும் போது, காங்கிரசை அவர்கள் அடியோடு வெறுக்கிறார்கள் என்பது துலாம்பரமாகத் தெரிகிறது. தி. மு. க. ஆட்சியை ஸ்திரப்படுத்தி அதன் மூலம் பல நன்மைகளைப் பெற முடியுமென்று தமிழ் நாட்டுமக்கள் உறுதியாக நம்புகின்றனர். தமிழ் நாட்டு காங்கிரஸ், தமிழ் மக்களின் எண்ணங்களையும் அபிலாஷைகளையும் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயற்படத் தவறினால், இன்னும் 50 ஆண்டுகள் சென்றாலும் அதனால் மக்களின் இழந்த நம்பிக்கையைப் பெறவே முடியாது.

## பொறுப்பு

ஆனால் அதே நேரத்தில், மக்களின் அபரிமிதமான நம்பிக்கையைப் பெற்றுள்ள தி. மு. கழகம், அந்த நம்பிக்கைக்கு ஊறு தேடாதவகையில் தனது பணிகளை ஆற்ற வேண்டும். பேரறிஞர் அண்ணாவும் மறைந்து விட்ட நிலையில்— தி. மு. க. தலைவர்கள் ஒவ்வொருவருக்குமே பெரும் பொறுப்பு ஏற்பட்டுள்ளது.

நாட்டு நிர்வாகத்தை செம்மையாக நடத்தி—மக்களுக்கு இயலக் கூடிய அளவில் நன்மை புரிய வேண்டும். —இந்தி நுழையாமல் காத்து நிற்க வேண்டும் — தமிழ் வளர்ச்சிக்கு முடிந்தளவு உதவ வேண்டும். இம் மூன்று பணிகளையும் தி. மு. க. ஆட்சி சீருடனும் சிறப்புடனும் செய்துவருகிறது. அதனால் தான் வரட்சிக் கொடுமை சோதனை ஏற்பட்ட நேரத்திலும்—மக்கள் தங்கள் விசுவாசத்தை தி. மு. கழகத்திடமே காட்டியுள்ளனர்

## காங்கிரஸ் வீழ்ந்த காரணம்

இதே வேளையில், தி. மு. கழகத்துக்குள் உட்பூசல்களும் கோஷ்டித்தகராறுகளும் ஏற்படாமல் கண்காணித்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொரு தி. மு. க. தலைவரதும் நீங்காக் கடமையாகும். காங்கிரஸ் வேரோடு சாய்வதற்கு ஒரு காரணம் உட்கட்சிப்பூசல்களே என்ற உண்மையை நாம் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

அண்ணா மறைந்த பின்னர், கட்சித் தலைவர் யார் என்ற கேள்வி விஸ்வரூபமாக எழுந்த நேரத்தில் தலைமைப் போட்டி ஏற்பட்டு தம்பிகள் தங்களுக்குள் மோதிக் கொள்ளப்போகிறார்கள்; கழகம் உடையப் போகிறது என்று காங்கிரசார் எதிர்பார்த்திருந்த வேளையில்—

கலைஞர் கருணாநிதி தலைவராக போட்டியின்றி தெரிவு செய்யப்பட பெருந்தன்மையுடன் வழி விட்டுக் கொடுத்து கழகத்தின் கட்டுப்பாட்டையும் கண்ணியத்தையும் காப்பாற்றினார் நாவலர் நெடுஞ்செழியன்.

## ஆணையும் அடி சறுக்கியது

இவ்வளவு மிகப் பெரும் அரசியல் பண்பாட்டைக் கடைப் பிடித்த நாவலர், அதன்பின்னர் பலபொதுக் கூட்டங்களில், கழகத்தில் நான் இரண்டாவது ஆள் - கருணாநிதி மூன்றாவது ஆள். மூன்றாவது ஆளுக்குக் கீழ் நான் அமைச்சர் பதவி வகிக்க மறுத்து விட்டேன் என்றெல்லாம் பகிரங்கமாகக் கூறி, அரசியல் எதிரிகளுக்குப் 'பிடி' கொடுக்க ஆரம்பித்தார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று செயற்படும் நாவலர், இரண்டாவது ஆள், மூன்றாவது ஆள் என்று தி. மு. க. தலைவர்களுக்கு 'நம்பர் குத்த' முற்பட்ட செயல் ஆனையும் அடி சறுக்கும் என்ற

## 'எஸ்ஸாரெம்'

பேருண்மையை எடுத்துக் காட்டி விட்டது.

## அறிக்கைப் போர்

இப்போது அண்மைக் காலமாக தி. மு. க. வின் புதிய பொதுச் செயலாளர் பதவி குறித்துக் கலைஞர் கருணாநிதியும் நாவலர் நெடுஞ்செழியனும் 'அறிக்கைப் போரில்' ஈடுபட்டிருப்பது கண்டு வருந்தாத இலங்கைத் தமிழன் இருக்கவே முடியாது. கழகத்தின் இருகண்மணிகளான கலைஞரும் நாவல[ரு]ம் கருத்[...] இணைந்து [...] வேண்டுமெ[...] கைத் தமி[...] விருப்புடன் [...]கிறார்கள்.

மத்திய ஆ[...] கிடக்கும் அ[...] நிலங்களுக்கு[...] கப்பட வே[...] பெரு நோ[...] வைத்து ஆ[...] சுக் கழகத் [...]சி. போரா[...] இரு[...]கிறார். [...]டத்[...]க்கு தி[...] தமிழ் நாட்டு[...] ஞர் கருணாநி[...] ரவு நல்கி வ[...]

## கட்சிக்கு [...]

அதிகாரம் [...] ஒரே இடத்தி[...] பது எப்படி [...] நல்லதில் [...] போல ஒரு [...] அதிகாரங்க[...] களும் ஒருவ[...] மட்டும் குவி[...] பகிர்ந்தளிக்[...] டியதவசிய[...] தான் கட்சி[...] செயற்பட [...]

வரட்சியு[...] பட்ட கடும்[...] தமிழ் நாட்[...]

---

# 'தமிழன் கதை' நாடகம் ஒவ்வொரு தொகுதியிலும் மேடையேற்றப் படவேண்டும்

மக்களின் உள்ளங்களைச் சுண்டி இழுத்து, அவர்களிடையே நாட்டின் நிலையையும் - சமுதாயத்திலுள்ள ஓட்டை உடைசல்களையும் புட்டுக் காட்டி நல்ல கொள்கைகளை விதைப்பதற்கு நாடகமே சிறந்த பிரசார சாதனம் என்பதை அறிஞர்களும், கலாவல்லுனர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர். படிப்பற்ற - எழுத்துவாசனையற்ற பாமர மக்களிடமும் அவர்களது இதயங்களில் ஊடுருவக் கூடியதாக ஒரு கொள்கையைப் பதிக்க முடியுமானால், அது நாடகங்களால்தான் முடியும்.

கலை கலைக்காக என்ற வரட்டுக் கூச்சல் மாறி கலை மக்களுக்காக - மக்களின் ஏற்றத்துக்காக - நல்வாழ்வுக்காகப் பயன் படுத்தப்பட வேண்டும் என்ற கருத்து மேலோங்கி வரும் காலமிது. தமிழ் நாட்டில், முதன் முதலாகக் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் கலையை மக்களுக்காகப் பயன்படுத்தினார். அவர் தமது நாடகங்களின் மூலம் சமுதாயத்தில் மலிந்துள்ள மூடக் கொள்கைகளை - ஜாதிபேதத்தை - ஏற்றத் தாழ்வுகளைச் சாடுசாடென்று சாடினார். காந்தியாரின் மதுவிலக்குக் கொள்கையைப் பிரசாரம் செய்தார். நல்ல கொள்கைகளை நாட்டிலே பரப்புவதற்குத் துணிந்து கலையைப் பயன்படுத்தியவர் கலைவாணரே.

கலைவாணரையடுத்து தமிழ் நாட்டில் கலையைப் பிரசார சாதனமாகப் பயன்படுத்தி அதில் பூரணவெற்றி கண்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினரே. தி. மு. கழகத் தலைவர்கள், கழகக் கொள்கைகளையும் காங்கிரஸ் ஆட்சியினால் அடையும் துன்பங்களையும்" மக்களுக்குத் தெளிவுற எடுத்து விளக்கும் பல நாடகங்களை எழுதி ஊர் ஊராக நடித்துக் காட்டினார்கள். கழக மாநாடுகளில் எல்லாம் கண்டிப்பாக நாடகம் ஒன்றும் இடம் பெறுவது இன்றும் வழக்கமாக உள்ளது. அது மட்டுமன்றி ஒவ்வொரு பொதுத்தேர்தல் சமயத்திலும் கழகத்தின் கொள்கைகளையும், நாட்டின் நிலையையும் படம் பிடித்துக் காட்டும் நாடகங்களைத் தயாரித்து மக்கள் முன் மேடையேற்றினார்கள். 1967-ம் ஆண்டு கழகம் தமிழ்நாட்டு ஆட்சியைக் கைப்பற்றிய தேர்தலின்போது - தி. மு. க. வினர் நடித்த 'காகிதப் பூ' நாடகம் மக்களைப் பெருமளவில் தி. மு. க.வின் பால் திருப்பிவிட்டது என்பதில் ஐயமில்லை.

இதில் மிகவும் குறிப்பிடக் கூடிய அம்சம் என்னவென்றால், மெத்தப்படித்தவர்களாகிய கழகத் தலைவர்களும் 'அரிதாரம்' பூசி நாடக மேடையில் தோன்றித் தங்கள் நாடகங்களில் நடித்தது தான். இதனால் கழகத்தின் பால் பாமர மக்களை சுலபத்தில் கவர்ந்திழுக்க அவர்களால் முடிந்தது. அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி முதற் கொண்டு கழகப் பிரச்சார நாடகங்களில் நடியாத தி. மு. க. தலைவர்கள் எவருமிலை எனலாம்.

ஃ

ஏப்ரல் 8ம் நாள் செவ்வாய்க்கிழமை இரவு 10 மணிக்கு உடுவிலில் அமைக்கப்பட்டிருந்த தமிழரசு மாநாட்டுப் பந்தலில் அமரர் ஏகாம்பரம் அரங்கில் தமிழரசு வாலிப முன்னணியினரால் மேடையேற்றப்பட்ட 'தமிழன் கதை' நாடகத்தைப் பார்க்கத்தயாராக இருந்த எனது உள்ளத்தில் மேற்கண்ட சிந்தனை ஓடிக்கொண்டிருந்தது.

## கோவை மகேசன்

இலங்கைத் தமிழரசு கட்சியினரும் ஏன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாணியைப் பின்பற்றி நாடகங்கள் மூலம் மக்களுக்கு கொள்கை விளக்கமளிக்க முன்வரக் கூடாது என்ற கேள்வி என் நெஞ்சுள் பலமுறை அலைமோதியதுண்டு.

முதன் முதலாக உடுவில் மாநாட்டில் தமிழரசுக் கொள்கை பிரசார நாடகமான 'தமிழன் கதை' நாடகத்தை மேடையேற்றியதன் மூலம் தமிழரசு வாலிப முன்னணியினர் எனது கனவை நனவாக்கிவிட்டனர்.

ஆனால் இங்கு எனக்குள்ள மற்றொரு ஆசையையும் கூறத்தான் வேண்டும். தமிழரசுக்கட்சியின் கொள்கைப் பிரச்சார நாடகங்களில் நடிப்பதற்கு தமிழரசுக்கட்சியின் தலைவர்கள் கூச்சப்படாது முன்வர வேண்டும். முதியவர்கள் பின்நின்றாலும், கட்சியிலுள்ள இளந் தலைவர்கள் — இராசதுரை அமிர்தலிங்கம், வி. [...] நவரத்தினம். துரைரத்தினம், தர்மலிங்கம் போன்றவர்கள், கட்சிப் பிரசார நாடகங்களில் தோன்றி நடிக்க வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம்மக்களிடம் கொள்கைப் பிரசாரம் செய்வது மட்டுமன்றி, மக்களை வெகுவாகக் கவரவும் முடியும்.

நாடகத்தில் நடிப்பதை மாற்றுக் கட்சியினர் எங்கே கேவலமாகப்பிரசாரஞ்செய்து விடுவார்களோ என்ற அச்சம் இருக்கத் தேவையில்லை. தமிழ்நாட்டின் பேரறிஞரான அண்ணா ஒரு நடிகராக விளங்கியிருக்கும் போது— இன்றைய தமிழ் நாட்டின் முதல்வர் கலைஞர் கருணாநிதி ஒரு நடிகராக இருக்[கும்] போது, கொள்கைப் பிர[சா]ரத்துக்காக மேடையேறி நடிப்பதில் எவ்விதக் கௌரவக் குறைவும் ஏற்பட முடியாது. தமிழரசுக் கட்சியின் இளந் தலைவர்கள் இதைச் சிறிது ஊன்றிச் சிந்திக்க வேண்டும்.

தமிழரசு வாலிப முன்னணியினர் மேடையேற்றிய 'தமிழன் கதை' நாடகம் 1947ம் ஆண்டிலிருந்து இன்றுவரை இந்நாட்டுத் தமிழ் பேசும் தம[...] இங்[...] வா[...]

மக்களின் அ[...] நிகழ்ந்த ச[...] யும் நம் நினை[...] வந்தது. த[...] வர் தமிழின[...] துரோகங்க[...] புட்டுப் பு[...] தமிழரசுக்க[...] பாதையைத்[...] சித்தரித்த[...]

'தமிழன் [...] கள் ரசிக்க[...] யில் ராஜா [...] யாக உருவ[...] கேற்றனை [...] பாராட்டும்[...] வர் இளைஞ[...] ரம்.

இந்நாடக[...] டுத்தியவர் [...] பழைய உறு[...] உள்ளம் ப[...] கலைஞர் எ[...] அவர்கள். ([...] 1961ம் ஆண்[...] கத்தின் பே[...] வீரன் ஒருவ[...] முனைக்கு த[...] திறந்து கா[...] யாளர் என்ப[...] குறிப்பிடத்[...]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ர் யார்? ...நிதியா?



...ரும் கருத்து மோதலின்றி இணைந்து செயற்பட வேண்டுமென்றே இலங்கைத் தமிழர்கள் பெரு விருப்புடன் எதிர்பார்க்கிறார்கள்.

மத்திய ஆட்சியில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற பெரு நோக்கத்தை முன் வைத்து ஆகஸ்டில் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. போராட்டத்திலீடுபட இருக்கிறார். இப்போராட்டத்துக்கு தி. மு. கழகமும் தமிழ் நாட்டு முதல்வர் கலைஞர் கருணாநிதியும் முழு ஆதரவு நல்கி வருகின்றனர்.

## கட்சிக்கு நல்லதல்ல

அதிகாரம் எப்பொழுதும் ஒரே இடத்தில் குவிந்து கிடப்பது எப்படி ஒரு நாட்டுக்கு நல்லதில்லையோ - அதே போல ஒரு கட்சியிலும் சகல அதிகாரங்களும் பொறுப்புக்களும் ஒருவர் இருவரிடமும் மட்டும் குவிந்து கிடக்காமல் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியது அவசியம். அப்போது தான் கட்சி திறமையுடன் செயற்பட முடியும்.

வரட்சியும் அதனால் ஏற்பட்ட கடும்பஞ்சமும் இன்று தமிழ் நாட்டைப் பயமுறுத்துகிறது. இத்தகைய நெருக்கடி மிகுந்த நிலையில் ஆட்சிச் சக்கரத்தை கையில் பிடித்திருக்கும் முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு பெரும் பொறுப்பு இருக்கிறது. அத்துடன் கட்சித்தலைவர் பதவியையும் கலைஞரே வகித்து வருகிறார். இந்த நிலையில் அவரிடம் மேலும் மேலும் பொறுப்புக்களை சுமத்துவது கழகத்துக்கும் நாட்டுக்கும் நல்லதல்ல.

## கலைஞர் பொறுப்பு

கழகப் பொதுச் செயலாளர் பதவிக்கு கலைஞர் கருணாநிதி போட்டியிட்டால், அவரே தேர்ந்தெடுக்கப்படுவார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஏனெனில் கழகத்தவரிடையே கலைஞருக்கு இன்று உள்ளது போன்ற அபரிமிதமான செல்வாக்கும் ஆதரவும் வேறு எந்தத் தலைவருக்கும் கிடையாது என்பதை யாரும் மறுக்க முடியாது

ஆகவே பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியிடுவதிலிருந்து கலைஞர் கருணாநிதி ஒதுங்கிக் கொண்டு நாவலர் நெடுஞ்செழியனுக்கு விட்டுக் கொடுப்பாரானால் கலைஞரின் பெருந்தன்மைக்கு அது ஓர் எடுத்துக்காட்டாக விளங்குவதுடன், கழகத்தின் ஐக்கியமும் உறுதிப்படுத்தப் பட்டு விடும். இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் கருத்தும் இதுவே என்பதை கலைஞர் அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## இலங்கைத் தமிழர் விருப்பம்

தமிழ் நாட்டில் தி. மு. கழகம் கோஷ்டிப் பூசல்களின்றிப் பலம் வாய்ந்த கட்சியாக என்றென்றும் இயங்க வேண்டும் எனத் தமிழ் நாட்டு 4 கோடி மக்கள் மட்டுமன்றி வெளி நாடுகளில் வாழும் இரண்டு கோடித் தமிழர்களும் ஒரே மனதாக ஆசைப் படுகிறார்கள். வெளி நாட்டுத் தமிழர்கள் தி. மு. க. மீது கொண்டுள்ள இந்த நம்பிக்கை அண்ணாவின் மறைவுக்குப்பின் சிதைந்து போவதற்கு தி. மு. க. தலைவர்கள் துளியும் இடமளிக்கமாட்டார்கள் என நம்புகிறோம்.

தி. மு. கழகத்தின் இரு பெரும் தலைவர்களான நாவலரும் கலைஞரும் மீண்டும் ஐக்கியப்படவேண்டும். ஜூனில் நடைபெறவிருக்கும் பொதுச் செயலாளர் தெரிவு அதற்குவழிவகுக்க வேண்டும் என்பதே இலங்கைத் தமிழர்களின் பெருவிருப்பு என்பதை தமிழ் நாட்டுத் தி. மு. க தலைமைக்கு குறிப்பாக கலைஞர் கருணாநிதியின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறோம்.



தமிழன் கதை நாடகத்தை உருவாக்கியவர்களும் அதில் நடித்தவர்களும் இங்கு காணப்படுகின்றனர். இயக்குனர் ஆகவும், கதை வசன கர்த்தாவான எல். ஏ. சுந்தரமும் இரு பக்கங்களிலும் நிற்கின்றனர்.

மக்களின் அரசியல் வாழ்வில் நிகழ்ந்த சகல சம்பவங்களையும் நம் நினைவுக்கு கொண்டு வந்தது. தனிப்பெருந் தலைவர் தமிழினத்துக்கு ஆற்றிய துரோகங்களையெல்லாம் புட்டுப் புட்டு வைத்தது. தமிழரசுக்கட்சி நடந்துவந்த பாதையைத் தெளிவாகச் சித்தரித்தது.

'தமிழன் கதை'யை மக்கள் ரசிக்கக் கூடிய முறையில் ராஜா ராணிக் கதையாக உருவமைத்து, அதற்கேற்ற கதை வசனத்தை பாராட்டும்படி அமைத்தவர் இளைஞர் எம். ஏ. சுந்தரம்.

இந்நாடகத்தை நெறிப்படுத்தியவர் இயக்கத்தின் பழைய உறுப்பினரும் எங்கு உள்ளம் படைத்தவருமான கலைஞர் எஸ். டி. அரசு. அவர்கள். (இதே அரசு தான் 1961ம் ஆண்டு சத்தியாக்கிரகத்தின் போது இராணுவ வீரன் ஒருவனின் துப்பாக்கி முனைக்கு தனது மார்பைத் திறந்து காட்டிய திண்மையாளர் என்பதையும் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும்.

நாடகத்தில் எல்லோருமே தங்கள் பாத்திரங்களை சிறப்பாகச் செய்தனர் என்றாலும் பேச்சாலும், நடிப்பாலும் தனிப்பெருந் தலைவராகவே (மதுராந்தகர்) மாறிவிட்ட திரு. ஏ. ரி. சிங்கத்தையும், அருட்செல்வராக நடித்த குணராசாவையும் விசேடமாகப் பாராட்டவேண்டும்.

இந்நாடகத்தில் நடித்துள்ளவர்களின் பெயர்களும் அவர்கள் ஏற்ற பாத்திரங்களும் வருமாறு:...

கே. கிருஷ்ணராசா — வர்மவிந்தியர்.
குணச்செல்வம் — கண்டகத்தேவன்.
கபாலித்தேவன் — பீதாம்பரம்.
வேல் அழகன் — தருமராமர்.
அரசரட்ணம் — பிரம்மபாணி
இராசரத்தினம் — வஜ்ஜிரதேவ்
குணராசா — அருட்செல்வர்.
பரமசாமி — கைலைவன்னி.
அமரலிங்கம் — வளவன்.
கணேஷ் — செழியன்.
மு. மணியம் — முத்து.
மரியதாஸ் — சோலை.
விலாசினி — பூபாலி.
ஏ. ரி. சிங்கம் — மதுவாந்தகர்.
சந்திரமோகன் — புனிதசீலர்

மற்றும் நாடகத்தில் தோன்றிய மூன்று வாலிபர்களாக நாகராசா, பிரசாத், சேனாதிராசா ஆகியோர் தோன்றினர். நாடகத்தின் ஒப்பனையை தியாகராசாவும், தர்மகுலசிங்கமும் கவனித்தனர்.

(9-ம் பக்கம் பார்க்க)

எழுச்சியை ஏற்படுத்திய மூன்று நாடகங்கள்—2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அண்ணா காவியம்

காசி ஆனந்தன்

## முளை

குறுநிலவு வானத்தில் வளர்ந்தாற் போலே
கோலமுகை ஓரளவு விரிந்தாற் போலே
சிறுபிள்ளை வளர்ந்தழகு தெறிக்கும் வண்ணம்
சீர்செய்த ஓவியம்போற் சிரித்து நின்றான்!
அறுசுவையும் தோற்கின்ற மொழிகள் செய்வான்!
அடுத்தவரைக் கேள்விகளால் அடக்கி வைப்பான்!
வறுமையினால் அத்தனையும் மறப்பாள் அன்னை!
வளர்பிறையை அணைத்தணைத்து மகிழ்வாள்—
தொத்தார்!

திண்ணையிலே உட்கார்ந்து தெருவை நோக்கி
தெருவினிலே உட்கார்ந்த ஏழை மேலே
கண்ணிரண்டை நெடுநேரம் கலக்க விட்டு
கனித்தமிழால் தொத்தாவைப் பார்த்துப் பிள்ளை
'மண்ணிலிருக்கின்றானே தொத்தா... அந்த
மனிதனுக்கு வீடெங்கே?' என்று கேட்பான்...!
என்னபதில் சொல்வதென அறியாள் தொத்தா...
'ஏழையர்க்கு வீடில்லை மகனே!' என்பாள்!

'ஏன்தொத்தா வீடில்லை? ஏழையர் மேல்
இரவினிலே பனிவிழுந்தால் நோய் வராதா?
ஏன்தொத்தா? ஏன்தொத்தா?' என்பான்...தொத்தா
'இறைவனதைக் கவனிப்பார்!! என்பாள் பிள்ளை
ஏன்தொத்தா இறைவனுக்கும் நாங்கள் தானே
இன்றுவரை பாலகொடுத்துக் கவனிக்கின்றோம்!
ஏன்தொத்தா ஏழையையும் கவனிப் போமே!
எனச்சொல்வான்... இளந்தொத்தா திணறிப்—
போவாள்!

பழந்தமிழன் பாரிகதை தொத்தா சொல்வாள்!
பத்துநாள் போனதன்பின் வயலுக்குத் தன்
குழந்தையையும் அழைத்தபடி உலவச் செல்வாள்!
கோடரியால் பசுமரத்தை ஒருவன் ஆங்கே
பிளந்தெடுக்க, ஏன்தொத்தா இந்தப் பாரி
பிளக்கின்றான் பசுமரத்தை? என்பான் தொத்தா
குழந்தைக்கு முத்தமிட்டு 'வறுமை யாலே
கொத்துகிறான் விறகில்லை கூற' என்பாள்.

'பாண்டியன்கை வாள்சுமந்து களத்தே ஆடிப்
பல்லாயிரம் தலைகள் வெட்டி வந்தான்...
தூண்டிலிலே புழுவானார் எதிர்த்தோ ரெல்லாம்!
துடிதுடித்தெழுந்தான் பாண்டியன தோற்றார் மாற்றார்!
மாண்டொழிந்தார் சிலம்பர்கள்! என்பாள் தொத்தா!
வளர்பிறையான்... 'ஏன்தொத்தா அடுத்த வீட்டுப்
பாண்டியனா? இருக்காது பாவம் மார்பில்
பத்தெலும்பு தெரிகிறதே தொத்தா! என்பான்!

தெட்டைவான் வரை' ஓங்கி நிமிர்ந்து நிற்கும்
நெடுங்கோயிற் கோபுரமும் நிரை நிரையாய்
வெட்டி வெட்டி வைத்திருக்கும் சிற்பத் தூணும்
விழிமகிழச் சுவைத்திருப்பான் பிள்ளை! தொத்தா
தொட்டணைத்து 'மகனே பார்! கல்லடுக்கித்
தொண்டை—அந்நாள் செய்ததொண்டை என்பாள்—
பிள்ளை!
கட்டிடத்தைப் பார்ப்பான்... பின் 'இந்த நாளில்
'கல்லில்லையா தொத்தா?' 'என்று கேட்பான்!

'பழம்பெருமை கேள்மகனே பண்டை நாளில்
பல்லவர்கள் இத்தெருவில் தேரின் மீதும்
குழம்பொலிசெய் குதிரையிலும் ஆனை மீதும்
கொடுமுதுகின் மீதினிலும பவனி போனார்!
பழம்பெருமை மிக்கதடா காஞ்சி' என்பாள்
பனிமொழியாள்... 'ஏன்தொத்தா கையிரண்டில்
தழும்புடனே வண்டியிழுக்கின்றான் இன்று
தமிழன்?' என்று வினாத் தொடுப்பான் தமிழர்
செல்வம்!

ஐந்தடிக்குத் தொத்தாவின் அறிவு பாய்ந்தால்
ஆறடிக்குத் தமிழ்அழகன் அறிவு பாயும்!
பைந்தமிழில் ஐந்துதமிழ் தொத்தா சொன்னால்
பத்துப்பன் னிரண்டுதமிழ் பிள்ளை சிந்தும்!
மைந்தவர்க்கோர் முறைதொத்தா அழுதால் பிள்ளை
நாலுமுறை அழும்!ஏங்கும்! துடிதுடிக்கும்!
மைந்தனுடை அறிவுக்கும் உள்ளத் துக்கும்
மணிததொத்தா நாள்முழுதும் அடிமை யானாள்!

நிறைவுடையாள் இளந்தொத்தா பிறை நிலாவை
நெஞ்சத்தே அழுத்திட்டும் மகனை வீட்டில்
உறவினர்கள் வரும்பொழுதும் போகும் போதும்
உட்கார வைத்தவனின் மொழிக ளொன்றும்
நறுந்தனிலே தோய்த்தெடுத்து நெஞ்ச மெல்லாம்
நல்லமுதால் குளிப்பாட்டி அனுப்பி வைப்பாள்!
பிறமனிதர் வாயெல்லாம் வாழ்த்தி நிற்கப்
பேரழகுப் பூமரம்போல் வளர்ந்தான் பிள்ளை;

வெள்ளையெழிற் பிஞ்சுமனம் உடையாள்... காஞ்சி
வெகுகாலம் தவமிருந்து பெற்ற பிள்ளை
துள்ளிவிளையாடி அருந் தமிழ்த்தேன் பொய்கை
தோய்ந்துமகிழ் ஆடும்இளந் தமிழர் செல்வம்
உள்ளறிவில் பழுத்தநிலை கண்டு பெற்றோர்
ஒருநாள் அத் தேன்பிறையை அழைத்துச் சென்று
பள்ளியிலே உட்கார வைத்தார்... தேன் போய்ப்
பாற்குடத்தில் விழுந்தொன்று கலந்த தம்மா!

—தொடரும்

## 4½ வண்டிகளும் 12 பேரும் தொடர தமிழ் காங்கிரசின் மேதின ஊர்வலம்!

# ஊர்வலத்தில் பங்குபற்ருது ஒதுங்கினர் பொன்னர்!

திட்டமிட்ட படி மே 2ந் நாள் தமிழ் காங்கிரஸ் கட்சியின் மேதின விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்று பத்திரிகைகளுக்கு அறிக்கைவிட்ட தமிழ் காங்கிரஸ் தலைவர், கடைசியில்ஏப்ரல் 30ம் நாள் தமது கட்சி நடத்திய மேதின ஊர்வலத்திலும்கூட்டத்திலும் பங்கு பற்ருது யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டே பதுங்கி விட்டார். நாலரை மாட்டுவண்டிகளுடன் 10, 12 பேர் பின் தொடர அரைசபாநாயகர் தலைகவிழ்ந்தபடி முன்னேவர தமிழ் காங்கிரஸ் நடத்திய கண்ருவி மேதின ஊர்வலம் யாழ்ப்பாண மக்களுக்கு நல்ல நகைச்சுவை விருந்தாக அமைந்திருந்தது,

தமிழ் காங்கிரஸ் தலைவர்' கிட்டமிட்டபடி 2ந் திகதி மேதின கூட்டம் நடத்தியே திருவோம் மற்றக்கட்சிகளைப் போல் பின் வாங்க மாட்டோம் என்று பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டார். ஆனல் ஏப்ரல் 30ம் திகதி நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் மேதின ஊர்வலத்திலோ கூட்டத்திலோ பங்கு பற்ருது யாழ்ப்பாணத்தில் பதுங்கி விட்டார். அவர் அன்று யாழ்ப்பாணத்தில் நின்ற சங்கதி யாழ் மாநகர சபை அங்கத்தவர் பலருக்குக் கூடத் தெரியும். அப்படி

மேதின ஊர்வலத்தை வண்ணர் பண்ணை நாச்சிமார் கோவில் இர தோற்சவதினக் கூட்டத்தோடு கூட்டமாக நடாத்தி கோவிலுக்கு வந்தவர்களையும் சேர்த்து ஊர்வலத்தில் இழுத்து வெற்றி பெறலாம் என்று தாம போட்ட கணக்கு தப்புக் கணக்கு என்பதை காங்கிரசார் பின்பு தான் உணர்ந்தனர்.

தமிழ் அரசுக்கட்சி மாநாட்டு ஊர்வலத்தை நடாத்தி அதில் கலந்து கொண்ட இரு உள்ளூர் ஆட்சி மன்றத் தலைமுகர் ஒருவரை மட்டந் தட்டி தனக்கு அதிக செல்வாக்கு இருக்கிறதென்பதைக் காட்டவே இவ் வண்டி ஊர்வலம் உடுவிலில் ஆயத்தம் செய்யப்பட்டது. உடுவில்— சங்குவேலி கமக்காரர் சங்கம், இளம் விவசாயிகள் சங்க அங்கத்தவர்களாகிய வண்டிச் சொந்தக்காரர்களுக்கு இவ்ஊர்வலம் தொழிலாளர் ஊர்வலம் எனவும் ஊர்வலத்தில் பங்கு பற்றும் வண்டிகளுக்கு பத்து ருபாவீதமும் தேநீர் செலவுக்கும் பணம் கொடுப்பதாகவும் அத்தமிழ் காங்கிரஸ் பிரமுகர் வாக்குப் பண்ணியதுடன் இது அரசியல் கட்சி ஊர்வலம் அல்ல என்றும் கூறியிருந்தார்.

இருபத்தைந்துக்கும் அதிகமான வண்டிகள் ஊர்வலத்தில் பங்குபற்ற இருந்தன. ஆனல் கடைசிநேரத்தில் தமிழ் அரசுக்கட்சி அனுதாபிகளும் ஆதரவாளர்களுமான அத்தனை வண்டிக்காரரும் ஊர்வலத்தில் பங்கு பெற மறுத்து விட்டனர் கடைசியில் நாலரைவண்டிகள் மாத்திரம் ஊர்வலத்தில் பங்கு பற்றின அதாவது நாலு களித்து விட்டு கடைசி நேரத்தில் காலைவாரி விட்டார்கள்.

இருபத்தைந்து முப்பது மாட்டு வண்டி ஊர்வலம் நாச்சிமார் கோவிலடிக்கு வரும் என்று காத்திருந்தவர்கள் நாலரை மாட்டு வண்டி ஊர்வலம் வந்துகொண்டிருக்கின்ற சங்கதியை தனிப் பெருந் தலைவருக்கு அறிவித்ததும் அவர் ஏங்கி இடி விழுந்து ஊர்வலத்திலோ, கூட்டத்திலோ பங்கு பற்ற முடியாதென அறிவித்தாராம்.

நாச்சிமார் கோவிலடியில் ஆரம்பித்த ஊர்வலத்தில் விரல்விட்டு எண்ணக் கூடியதாகப் பத்துப் பன்னிரண்டு பேர் வந்ததை கடந்தவாரம் ஒரு தமிழ் தினசரிப் பத்திரிகையில் வந்த தமிழ் காங்கிரஸ் ஊர்வலப் புகைப்படமே நிரூபிக்கிறது ஊர்வலத்தில் பாவம் உடுப்பிட்டியார் தொங்கிய தலை நிமிராமல் வந்த காட்சிகவலைக்குரியது.

### அதே நபர்

கடந்த யாழ் மாநகர சபை மேயர் தெரிவில் குறிப்பிட்ட ஒருஅங்கத்தவரை காங்கிரஸ்-தமிழ் அரசு கூட்டுமுன்னணி பக்கம் வாக்களிக்க சுன்னுகம் பட்டின சபைத் தலைவரின் உதவியோடு திருப்பி விட்டதாக சுன்னுகம் பட்டின சபை அங்கத்தவர் ஒருவர் தனிப் பெருந் தலைவருக்கு உறுதி அளித்திருந்தாராம். ஆனல் முடிவில் குறிப்பிட்ட மாநகர சபை அங்கத்தவரே தமிழ் காங்கிரஸ்- தமிழ் அரசு கூட்டு முன்னணி மேயருக்கு போட்டியாக நின்ருர். இவ்விதம் தனிப் பெருந் தலைவருக்கு ஏமாற்றத்தை கொடுத்த அதே பேர்வழிதான் மாட்டு வண்டி ஊர்வலம் நடாத்துவதாக கூறி கோட்டை விட்டு தனிப் பெருந் தலைவரின் அதிருப்திக்கு ஆளாகிவிட்டாராம்.

# தலைகவிழ்ந்து வெட்கித்தபடி உடுப்பிட்டியார் வந்த பரிதாபம்!

விருந்தும் படுகண்ணிருவி ஊர்வலத்திலோ கூட்டத்திலோ தனிப்பெருந் தலைவர் கலந்து கொள்ளாததற்கு உடுப்பிட்டி உறுப்பினர் சித்திரை 30ந் தேதி மேதினத்தில் கூறிய காரணம், தனிப் பெருந் தலைவர் பிரதமருடன் பேச்சு வார்த்தை நடாத்திக் கொண்டிருப்பதால் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்பது. பத்திரிகைகளிலும் பிரதமர்— தமிழ் காங்கிரஸ் சந்திப்புப் பற்றி செய்திவந்தது. ஆனல் 30—4—69 இல் அவர்கள் சந்தித்ததாக எந்தப் பத்திரிகையிலும் செய்தி வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வர்களின் புகைப் படங்கள் பத்திரிகைகளில் வெளிவந்ததைக் கண்ணுற்ற தமிழ்காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் தானும் ஓர் மாட்டு வண்டி ஊர்வலத்தை உடுவிலில் இருந்து நடத்த ஒழுங்கு செய்தார்.

பத்திரிகைப் புகைப்படப் பிடிப்பாளரையும் ஒழுங்கு செய்து தன்னை மாட்டுவண்டியில் வைத்துப் படம் பிடித்து பத்திரிகைக்கு அனுப்ப முன் பணம் கூடக் கொடுத்திருந்தார்.

தனிப் பெருந்தலைவரின் உறவினரும் சவாரிப் பிரமுகருமான சுன்னுகத்து பிர இரட்டை மாட்டு வண்டிகளும் ஒரு ஒற்றை மாட்டு வண்டியுமாகநாலரைமாட்டு வண்டி ஊர்வலம் உடுவிலில் ஆரம்பமானது.

### நாலரை வண்டிகள் ஊர்வலம்

சுன்னுகம் பட்டின சபையின் சமசமாஜ கட்சிப் பிரமுகர் தலைவராக வர உதவிய தமிழ் காங்கிரசை சேர்ந்த இப்பட்டின சபை உறுப்பினருக்கு முன்பு ஒருகால் ''செஞ்சோற்றுக் கடனுக'' உபதலைவர் பதவி கிடைத்தது. அப்படியிருந்தும் அந்தக் கட்சியினர் கூட வண்டி ஊர்வலத்தில் பங்கு பற்றுவதாக வாக்

## ஆங்கிலோ தமிழராகிய இவரைத் தெரியுமா?

தமிழன் தமிழனுடன் தமிழில் பேசவேண்டும்என்ற சுலோகத்தை தாங்கிக் கொண்டுவெளிவரும் '...உலகம்' ஏட்டின் ஆசிரியரைப்பற்றிச் சில சுவையான தகவல்கள் உங்களுக்குத் தெரியுமா? தெரியாவிடின், இதோ தெரிந்து கொள்ளுங்கள்.

(1) தொலைபேசியில் தமது வியாபார சம்பந்தமாக தொடர்பு கொள்ளும் போது ஆரம்பம் முதல்இறுதி வரை ஆங்கிலத்திலேயே பேசுகிருர். தமிழர்களுடன் கூட ஆங்கிலத்திலேயே அடித்து முழக்குருர்.

(2) தமது வியாபாரம் சம்பந்தமாக அரசாங்கத்துடனே, ஏனையவர்களுடனே வைத்துக் கொள்ளும் சகல கடிதத் தொடர்புகளிலும் ஆங்கிலத்தையே உபயோகிக்கிருர்.

(3) அவர் மாலை நேரங்களில் விளையாடுவது கூட 'பாட்மின்ரன்' என்னும் ஆங்கில விளையாட்டு.

(4) ஆங்கில விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கே பேராதரவு காட்டி வருகிருர்.

தமது அன்ருட அலுவல்களையெல்லாம் ஆங்கிலத்திலேயே செய்து கொண்டு ஆங்கிலத்தில் குளித்து முழுகி வாழ்வு நடத்தும் இந்த ஆசிரியர் நடத்தும் போதனைதான் 'தமிழன் தமிழனுடன் தமிழில் பேசவேண்டும்' என்பது!

சொல்லுக்கும் செயலுக்கும் எவ்வளவு ஒற்றுமை பார்த்தீர்களா?

## எங்கே நீயோ நானும் அங்கே உன்னேடு

[2ம் பக்கத் தொடர்ச்சி]

இருக்குமானல் எம்மிடையே இன்னும் உண்மையான சகோதரபாசம் நிலவில்லை என்று தான் கூறவேண்டும். இப்படியான மனவேற்றுமையிடையில் நாம் தொடர்ந்து ஒற்றுமையாக வாழலாம் என்பது என்னைப் பொறுத்தவரை முடியாத காரியம் என்றே நினைக்க வேண்டியுள்ளது. அதனுல் நான் உங்களை விட்டுப் பிரிந்து போக நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளேன் எனக் கூறி முடித்தபோது அவள் நாசூழறிற்று.

அவன் பேச்சைத் தொடர்ந்து அங்கே நிலவிய மௌனத்தினிடையே ரகு தெருவாயிலை நோக்கி நடந்தான். திடீர் என அங்கு நிலவிய மௌனத்தைக் கிழித்துக் கொண்டு புறப்பட்ட குழந்தையின் அழுகுரல் அவன் நடையைத் தளரப்பண்ணியது. அவன் வாயில்வரை சென்றுவிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

'அண்ணு' என்று அழைத்துக்கொண்டே அவனைப் பின் தொடர்ந்து ஓடி வந்தாள் பவானி. அவனிடம் அவள் குழந்தை உமாவை நீட்டிய போது அவனுல் தட்டிக் கழிக்க முடியவில்லை. தன் இரு கரத்தாலும் குழந்தையைப் பெற்றுக்கொண்டு பவானியைப் பார்த்தான்.

'அண்ணு... என்னை இப்படி அணு அணுவாகச் சித்திரவதைப் படுத்தாமல் நீங்கள் கொன்றே இருக்கலாம். அது எனக்கு எவ்வளவோ நிம்மதியைத் தேடித் தந்திருக்கும். என் மனதில் எண்ணிக் கூடப் பார்க்க முடியாதவற்றையெல்லாம் நீங்கள் உங்கள் கற்பனையில் வடித்து என்னை வதைத்து விட்டீர்கள். உங்கள் மீது நம்பிக்கையில்லாத காரணத்தால் நான் எதையும் உங்களிடம் இருந்து மறைக்கவில்லை; மறைக்கப் போவதுமில்லை. ஆனல் நீங்கள் இதுவரை எனக்கு[illegible] பட்ட கஷ்டம் [illegible] என்ற நல்லெண்ணந்தான் என் வாய்க்குப் பூட்டுப் போட்டு வைத்தது. உங்களிடம் என் மனதில் உள்ளதைப் கூறியிருந்தால் இன்று நான் இவ்வளவு தூரங்கண்ணீர் வடித்திருக்கமாட்டேன். கொஞ்சம் பொறுங்கள் இன்று நடந்ததை விபரமாகக் கூறுகிறேன். அதன்பின்பு நீங்கள் எங்களை விட்டுப் போய்த்தான் ஆகவேண்டுமென்ருல் உங்களைத் தடுக்க எனக்கு எந்த அதிகாரமும் இல்லை'' என்று அவள் விம்மலுக்கிடையே கூறியபோது ரகு சிந்திக்கத் தொடங்கினன்.

தான் ஆத்திரத்தில் அறிவையிழந்து விட்டதாக நினைக்கத்தோன்றியது அவனுக்கு. அப்போதுதான் அன்ெருநாள் பவானியழுததும் அதனுல் ஏற்பட்ட அதிர்ச்சியும் அவன் ஞாபகத்துக்கு வந்தன. வைத்திய சாலையில் இருந்து அவள் வீடு திரும்பி [illegible] யமாக அழுத காரணத்தை அவன் அறிந்துகொண்டான். பவானி வேலை பார்த்த வீட்டில் ஒரு நாள் மதியம் யாரோ அந்த வீட்டு எஜமானியைக் காண மோட்டாரில் வந்ததாகவும் அவரைத் தற்செயலாகப் பின்புறமாகப் பார்க்க நேரிட்டபோது அவர்தான் தனது காதலனுக இருக்கவேண்டும் எனத்தான் திட்டவட்டமாக நம்பியதாகவும் பழைய நினைவுகள் தன்னைப் பீடிக்கவே அந்தத் துக்கத்தைத் தாழமாட்டாமல் தான் அழுது விட்டதாகவும் பவானி கூறியிருந்தாள். அது கூட நன்மைக்கென்றுதான் ரகு நினைத்தான். அல்லது குழந்தை உமாவுக்கும் பெயர் பதிவு வைக்க அவன் சிரமப் பட்டிருப்பான். கதையோடு கதையாக அந்தக் குழந்தைக்குத் தகப்பனுக வேண்டியவனின் பெயர் ஜெயநாதன் என்று அறிந்து கொண்டான். ஆகவே இன்றும் ஒருவேளை அவனைக் கண்டிருக்கலாம் என நினைக்கத் தோன்றியது.

'அண்ணு... என பவானி திரும்பவும் அவனை அழைத்து இன்று காலையில் நான் மீண்டும் அவரைக்காண நேர்ந்தது. அன்று பின்புறத்தை மட்டுந்தான் கண்டதால் ஏற்பட்ட சந்தேகம் இன்று நிவர்த்தியாகி விட்டது. நான் கண்டது அவரே தான் உமாவின் அப்பாவேதான்...

அண்ணு... அவர் அன்றுநான் பார்த்தது போலவேயிருக்கிருர். ஆனல்... ஆமாம்... அண்ணு ஆனல் அவருக்குத் திருமணம் ஆகிவிட்டதாம்'' என்று கூறியபோது மயங்கி விழப்போன அவளைத் தன்னுடன் அணைத்துத் தாங்கிக் கொண்டான் ரகு.

வளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மத்திய வங்கியில் தமிழருக்குகதவடைப்பு?

இலங்கை மத்திய வங்கியில் தமிழ் பேசும் மக்களுக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்பட்டு வருவதாக தெரிகிறது. அண்மையில் வங்கி சேவைக்கு தெரிவு செய்யப்பட கிரேட்—2 எழுதுவினைஞர்களில் ஒரு தமிழர் தானும் இல்லையென்பது இங்கு குறிப்பிடத் தக்கது. அதே வேளையில் உயர் பதவியாளர்களாகவும் தமிழர் எவரும் தெரிவு செய்யப் படவில்லையாம். தமிழ் இளைஞர்களுக்கு கதவடைக்க வங்கி மேலிடம் முடிவு செய்து விட்டதா என்று பரவலாகக் கேட்கப்படுகிறது.

இது இப்படியிருக்க, வங்கியின் தமிழ்ப் பிரிவை மூடிவிடும் சூழ்ச்சித் திட்டத்துடன் பமஆரம்ப வேலைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிகிறது.

## ஆண்டறிக்கை

மத்திய வங்கியின் ஆண்டறிக்கை ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 ந் திகதி வெளிவர வேண்டியதாகும். ஆங்கில ஆண்டறிக்கையை மார்ச் 31ம் திகதியும் சிங்கள அறிக்கையை ஏப்ரல் 2ம் திகதியும் மத்திய வங்கி வெளியிட்டு விட்டது. ஆனல் தமிழ் ஆண்டறிக்கை இதுவரை வெளியிடப்படவில்லையென்று தெரிகிறது.

## மாத செய்திதிரட்டு

ஒவ்வொரு மாதமும் வெளியிடப்பட வேண்டிய தமிழ் மாதச் செய்திதிரட்டு கடைசியாக வெளிவந்தது எப்போது தெரியுமா? ஓராண்டுக்கு முன் – 1968 ஏப்ரலில். அதற்குப் பின் கடந்த 13 மாதங்கள் தமிழ் செய்தி திரட்டு வெளிவரவில்லையென்றும், அதே வேளையில் ஆங்கில சிங்கள செய்தி திரட்டுகள் தவருமல் வெளிவருவதாகவும் தெரிகிறது.

தமிழ் வெளியீடுகளில் வங்கி மேலிடம் அலட்சியம் காட்டுவதன் நோக்கம் வங்கியின் தமிழ்பிரிவை மூடிவிடுவதாக இருக்குமோ என்ற ஐயப்பாடு பலமாக எழுந்துள்ளது.



தமிழ் வெளியீடுகள் ஒழுங்காக வெளிவராமைக்கு காரணம், தமிழ் பிரிவுக்கு தகைமையும் பொறுப்பும்வாய்ந்த தமிழ் அதிகாரியும் போதிய மொழி பெயர்ப்பாளர்களும் இல்லாமையே என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இதே நேரத்தில், 700வது இலக்க திறைசேரி சுற்று நிருபத்தை வங்கிமேலிடம் மதிப்பதாக தெரியவில்லை' வங்கியின் பழைய ஊழியர்கள் உயர்பதவியாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் போது, வங்கிமேலிடம் அவர்களிடம் திறைசேரி கட்டளைக்கு முரணுக—சிங்களத்தகுதி கோரி வருகிறதாம். இதனல் பழைய ஊழியர்களான தமிழர்கள் பலர் உயர்பதவி பெறும் வாய்ப்பை இழந்துள்ளதாக வங்கி ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

## இரத்தினம் கண்டனம்

மத்திய வங்கியின் ஆண்டறிக்கை தமிழில் வெளியிடப்படாதது குறித்து அண்மையில் பாராளுமன்றத்தில் திரு. இரத்தினம் பா. உ. பலத்தகண்டனம் தெரிவித்தார். அப்போது அவர் கூறியதாவது.—

இம்மாதம் 26 ஆம் தேதி இந்தச் சபையிலே மத்திய வங்கியின் ஆண்டறிக்கை தமிழில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை நான் சபாநாயகர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தேன்.

இந்த அறிக்கை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. பாராளுமன்றத்திற் சமர்பிக்கப்படும் எல்லா அறிக்கைகளும் மூன்று மொழிகளிலும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற கொள்கைக்கு மாறுகமத்திய வங்கியின் ஆண்டறிக்கைதமிழில் சமர்ப்பிக்கப்படவில்லை. வழக்கமாக மற்ற அமைச்சர்கள் எல்லா அறிக்கைகளையும் பத்திரங்களையும் மூன்றுமொழிகளிலும் சமர்ப்பிப்பார்கள். ஆனல், தமிழ் மொழிப் பிரமாணத்தை நடைமுறைப் படுத்தவேண்டிய நிதியமைச்சர், இந்த முன் மாதிரிக்குப் புறம்பாக நடந்து கொள்வதுமனவருத்தத்தைத் தரக் கூடியதாகும்

தமிழ் மொழி விசேட பிரமாணங்களை நிறைவேற்றிய இந்தச் சபையிலேயே அந்தப் பிரமாணங்களை மீறத் தக்க முறையில் இந்நிகழ்ச்சி நடந்திருப்பது மிகவும் கவலைக்குடமாகும். ஆகவே, இவ்வறிக்கையின் தமிழ் மொழி பெயர்ப்பு இந்தச்சபையில் எப்பொழுது சமர்ப்பிக்கப்படும் என்பதை அறியவிரும்புகிறேன்.

அத்துடன், இலங்கை மத்திய வங்கி தமிழைப் புறக்குன்றது என்பதை நான் பலமுறை இந்தச்சபையிலே சுட்டிக்காட்டி இருக்கிறேன். எனவே, அரசாங்கத்தின் கொள்கைக்கு ஏற்ப எல்லா அறிக்கைகளையும் தமிழிலும் வெளியிட வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

---

## பரத்தை போடும் பத்தினி வேடம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சபைகளுக்கு அளிக்கப்பட்டால், தாம மசோதாவை ஆதரிப்பதாக பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் வெள்ளையறிக்கை விவாதத்தின் போது கூறியிருந்தார். கல்வி அதிகாரங்களைப் பூரணமாகக் கொடுத்தால் மட்டும் தேனென கொட்டும் மாவட்டசபை தமிழ்காங்கிரஸ் காரருக்கு தேனென இனித்துவிடுமா? அப்போது மட்டும் மாவட்டசபைகளால் தனிச்சிங்களம் நுழைந்துவிடாதா? தமிழினம் அழிந்துவிடாதா? மூனச் சிவசிதம்பரம் கூறும் பதில் என்ன?

மாவட்டசபை வந்திருந்தால், தனிச்சிங்களம் சுலபமாக திணிக்கப் பட்டிருக்குமென்றும் வடக்கு கிழக்கில் கூட அது நிர்வாக மொழியாகியிருக்குமென்றும் மூனச் சிவ சிதம்பரம் கூறியிருப்பது ஆராய்வற்றமுழுப் பொய்யாகும்.

இன்றைய அரசாங்கத்தின் மொழிக் கொள்கை—சிங்களம் மட்டும் சட்டமும் 1958 ம் ஆண்டு தமிழ் மொழி விசேட சட்டமும் 1966 ம் ஆண்டின் தமிழ் மொழி (விசேட) விதிகள் சட்டமும் இணைந்த ஒரு கொள்கையாகும், இதே மொழிக் கொள்கை தான் மாவட்ட சபை மசோதாவிலும் தெளிவாகக் குறிப்பிடப் பட்டிருந்தது.

மாவட்டசபை நிறுவப்பட்டிருந்தாலும் அரசாங்கம் இன்று பின்பற்றி வரும் அதே மொழிக்கொள்கைதான் அமுலிலிருந்திருக்கும். மா. சபைகள் மூலமாக வடக்கு, கிழக்கில் தமிழ் மொழி நிர்வாக அந்தஸ்தை பெற்று அரசாங்கத்துறைகளில் இன்னும் சுலபமாக நுழைக்கப்பட்டிருக்கும்.

எனவே மாவட்டசபை மசோதாவில் கூறப்பட்டுள்ள மொழிக்கொள்கையை தமிழ் காங்கிரஸ் எதிர்க்கிறதென்ருல், அரசாங்கத்தின் இன்றைய மொழிக்கொள்கையை எதிர்ப்பதாகத்தான் அர்த்தம் கொள்ள முடியும். அப்படியானல், அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை எதிர்த்து, உபசபாநாயகர் பதவியை உதறி எறிந்துவிட்டு அரசாங்கத்திலிருந்து வெளியேற திரு. சிவசிதம்பரம் தயாரா என்று கேட்க விரும்புகிருேம்.

மாவட்டசபை ஏற்பட்டிருந்தால், வடக்கு கிழக்கிலும் சிங்களம் நிர்வாக மொழியாகி இருக்கும் என்று கூறும் திரு. சிவசிதம்பரமும் அவரது தமிழ் காங்கிரசும் இவ்விரு மாகாணங்களிலும் தமிழை நிர்வாக மொழியாக்குவதற்கு இதுவரை எடுத்த ஒரு சின்ன நடவடிக்கையை தானும் கூற முடியுமா?

1956ம் ஆண்டு ஜுன் 5ந் திகதி சிங்களம் மட்டும் சட்டம்கொண்டுவரப்பட்ட அன்று முதல் இன்று வரை தமிழ் காங்கிரஸ் தமிழுரிமையை நிலைநாட்ட என்ன செய்தது?

இன்று சட்டரீதியாக தமிழுக்கு வடக்கு கிழக்கில் நிர்வாக மொழி அந்தஸ்தும், ஏனைய மாகாணங்களில் சில குறிப்பிட்ட உரிமைகளும் கிடைத்திருக்கின்றன வென்ருல் அதைச் சாதித்த பெருமை நூற்றுக்கு நூறு தமிழரசுக்கட்சிக்கேயுரியது. தமிழ் காங்கிரஸ் இதில் சிறிது கூட பாத்தியதை கொண்டாட இலாயக்கற்றது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனல், தமிழ் மக்களுக்கும் தமிழ் மொழிக்கும் இன்னும் பல உரிமைகளை தமிழரசு பெற்றிருக்கும்- தமிழ் காங்கிரஸ் என்ற தடைக்கல் இடையிலே கிடந்து துரோகத்திலீடுபடாதிருந்தால்.

1956 முதல் 1965 வரை தமிழரசுக்கட்சி நடத்திய மொழி உரிமைப்போராட்டங்களும், செய்த தியாகங்களும்தான் இன்று தமிழுக்கு ஓரளவு உரிமையைப் பெற்றுத் தந்துள்ளன.

1965 ம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் வாய்ப்பை பயன்படுத்தி தமிழரசுக்கட்சி பேச்சுவார்த்தை நடத்திப் பேரம் பேசியதால்தான் 1966ம் ஆண்டு தமிழ் மொழிப் பிரமாணங்களும் அதன்பின் 760 ம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுல்தான் வடக்கு கிழக்கில் தமிழ் நிர்வாக மொழி என்ற நிலையை சட்டபூர்வமாக பெற்றுள்ளதுடன் சிங்களம் மட்டும் சட்டமும் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டது.

இவையெல்லாம் தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும்- ஆகவே எவ்வித நிபந்தனையுமின்றி டட்லியே சரணம் என்று 1965ம் ஆண்டு சரணடைந்த தமிழ் காங்கிரசினர் இன்று வெட்கங்கெட்டு வாய் திறப்பது விந்தைதான்.

எனவே தமிழினத்தின் கோடரிக்காம்பாக- புல்லுருவியாக- விளங்கும் தமிழ் காங்கிரசை முற்று முழுதாக ஒழித்துக்காட்டினலன்றி தமிழினத்துக்கு சுபீட்சம் கிடையாது என்பதை இன்று தமிழ் மக்கள் தெளிவாக உணர்ந்து விட்டனர். ஆகவே சிவசிதம்பரங்களால் தமிழினத்தவரை மேலும் ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாதென்பது சர்வ நிச்சயம். —(தொடரும்)

---

## ரகசிய இயக்கம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தையும் ஒழுங்கையும் மீறி நடைபெறும் இத்தகைய வெறி ஆர்ப்பாட்டங்களை நசுக்குவதற்கு பொலிஸ் துறையினர் எவ்வித நடவடிக்கையிலும் இறங்கவில்லையெனத் தெரிகிறது.

தென்னிலங்கையில் தமிழ்ப் படங்களுக்கு எதிராக இன்று தூண்டிவிடப் பட்டுள்ள சிங்கள இனவெறி, நாளை தமிழர்களால் நடத்தப்படும் வியாபார ஸ்தலங்கள் தமிழ் பாடசாலைகள் போன்றவற்றை மூடும்படி திசை திரும்பலாமென்றும், அரசாங்கம் கடும் நடவடிக்கையெடுத்து தமிழ்ப்படங்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நசுக்காவிட்டால் பெரும் இனக்கலவரம் மூளலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

இதேசமயத்தில் 'தேசிய ஒற்றுமை' பேசும் திரு. டட்லி சேனநாயக்காவின் அமைச்சரவையைச் சேர்ந்த உள்நாட்டமைச்சர் டாக்டர் தகநாயகா, தமிழ்ப்படங்களை உடனடியாக, முற்றாகத் தடைசெய்ய வேண்டுமென்றும், இல்லாவிடின் நாட்டிலுள்ள சிங்கள இளைஞர்கள் தங்கள் கலாசாரங்களை மறந்து "இந்தியர்களாக" மாறிவிடுவார்களென்றும் பகிரங்கமாக 'எச்சரித்திருக்கிருர்! பிரதமருக்கு கிடைக்காத மரியாதை இந்திய நடிகர் ஒருவர் இங்கு விஜயம் செய்யும்போது, அவருக்கு கிடைப்பதாகவும் திரு. தகநாயகா 'பொருமைப்பட்டிருக்கிருர்.

தமிழ் மக்களின் கலாசார உரிமையைப் பறிக்கும் தமிழ்ப்பட இறக்குமதித்தடை பற்றியும், தமிழ்ப்படங்களுக்கு எதிராக ஆங்காங்கே நடைபெறும் ஆர்ப்பாட்டங்களைப் பற்றியும் தேசியம் பேசும் பிரதமர் மௌனம் சாதிப்பது பலருக்கு ஆச்சரியத்தை விளைவித்துள்ளது.

தமிழ்ப்பட இறக்குமதித் தடைக்கு தமிழ் காங்கிரசும் சம்மதம் தெரிவித்துள்ளதாம்.

## 'தமிழன் கதை'...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

இரவு 1-30 வரை பந்தலில் நிறைந்திருந்த இருபதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அசையாது இருந்து நாடகத்தை ரசித்தனர் என்ருல், அது அவர்களது உள்ளங்களை கொள்ளை கொண்டுவிட்டதென்று கூறவும் வேண்டுமா?

"தமிழன் கதை" சிலமாற்றங்களுடன் அடுத்தபொதுத் தேர்தலின் முன்னர் வடக்கு, கிழக்குமாகாணங்களிலுள்ள ஒவ்வொரு தொகுதியிலும் மேடையேற்றப்படவேண்டியது அவசியம். பத்துப் பிரசார கூட்டம் மூலம் செய்யக்கூடியதை ஒரு நாடகத்தின் மூலம் சாதித்துவிட முடியும்.

தமிழரசுக்கட்சி கட்சியின் உள்மட்டத்திலும் சனநாயக மரபுகளை எவ்வளவு நுணுக்கமாகக் கடைப்பிடித்து வளர்த்து வருகிறகி என்பதை மறுநாள் 9ந் திகதி காலையில் நடைபெற்ற அரசியல் மாநாடு பிரத்தியட்சமாகவிளக்கியது—

## உடுப்பிட்டி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

"இப்படி வல்வெட்டித்துறையில் ஒரு கூட்டத்தில் உடுப்பிட்டி எம். பி. கூறியதாக பத்திரிகைச் செய்தி கூறுகிறது. இது உண்மையாக இருந்தால் எம். ஜி ஆரை திரு. சிவசிதம்பரம் குறைத்து மதிப்பிட்டுள்ளார் என்பதுதான் பொருளாகும்.

"தமிழ் நாட்டில் எம். ஜி. ஆருக்கு வேறுயாருக்குமில்லாத பெரும் ஆதரவு இருக்கிறது. சென்ற தேர்தலில் படுத்துக் கொண்டே தேர்தலில் ஜெயித்தவர் எம். ஜி. ஆர். இந்நிலையில் இலங்கையில் எம் ஜி. ஆருக்கு ஆதரவு இல்லாவிட்டால் அவருக்கு படவுலக மார்க்கட்டே இல்லாமற்போய் விடுமென்று உடுப்பிட்டி எம் பி கூறியது எம். ஜி. ஆர். ரசிகர்களது உள்ளங்களையெல்லாம் புண்படுத்தி விட்டது.

"தென்னிந்தியத் தமிழ்ப் படங்களுக்கு தடை விதிக்க வேண்டுமென்று சிங்கள வெறியர் போடும் கூச்சலுக்கு தமிழ்காங்கிரஸ் ஒத்துப்பாடுகிறது. அக்கட்சியைச் சேர்ந்த திரு. சிவசிதம்பரம் எம். ஜி. ஆரைக்குறைவாகப் பேசியது எமக்கு ஆச்சரியத்தை விளைவிக்கவில்லை. எம் ஜி ஆரை குறைத்துக் கூறியதற்காக உடுப்பிட்டி எம். பி. மன்னிப்பு கேட்க வேண்டும்.

---

## இ. தி. மு. க.
## பொதுச்செயலாளர் மணவைத் தம்பி சுதந்திரனுக்கு விடுத்த அறிக்கை

இந்நாட்டுத் தமிழினத்தின் ஏற்றத்துக்காக தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணித்து வரும் தமிழரசுக்கட்சி தலைவர்களை தாக்கி அறிக்கை விட்டு வருகிருர்கள் இ. தி. மு. க. என்ற பெயரைத் தாங்கிக்கொண்டுள்ள சில பேடிகள். தமிழரசுக்கட்சி இது நாள் வரை செய்த தியாகங்களில் கால் தூசி கூட தமிழ் இனத்துக்கு செய்யாதவர்கள்— ஊர்பேர் தெரியாதவர்கள் எல்லாம் இ. தி. மு. க. என்ற பெயரில் தமிழரசுத் தலைவர்களைத் தாக்கி அறிக்கை விடுவதும், அதை தமிழரசுக்கட்சிக்கு எதிராகவே செயல்படும் சில தமிழ் தினசரிகள் பிரசுரிப்பதும் விஷமத்தனம் நிறைந்ததாகும்.

"இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு கலாசார இயக்கம். அது எப்போதும் தமிழரசுக் கட்சியின் துணை இயக்கமாகவே இயங்கிவரும். தமிழரசுக்கட்சிக்கு எதிராக அது ஒருபோதும் செயற் படாது என்பதை இ. தி. மு. க. பொதுச் செயலாளர் என்ற ரீதியில் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு அழுத்தமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘இலங்கை-இந்தியபிணைப்பை துண்டித்துவிட முடியாது’

“இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே யுள்ள நெருங்கிய பிணைப்பை அறுத்துவிட யாராலும் முடியாது.”


—இவ்வாறு தமிழரசுக் கட்சி சார்பில், இந்திய ஜனாதிபதி சாகிர் ஹுசேன் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பாராளுமன்றத்தில் இம் மாதம் 5ந் திகதி உரையாற்றிய சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் கூறினார்.

திரு. நவரத்தினம் ஆற்றிய உரை வருமாறு:—

“டாக்டர் ஜாகிர் உசேன் மறைவு குறித்து பிரதம மந்திரி அவர்களும், எதிர்க்கட்சித் தலைவியும் தெரிவித்த துயரம் தோய்ந்த கருத்துக்களை தமிழரசுக்கட்சி சார்பிலும், எனது தலைவரான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் சார்பிலும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளுகிறேன்.

துயரம் காணப்படுகிறது. விஷமத்தனமும், தவறான தகவலும் உள்ள சிலர் இதை இலங்கைக்கு விசுவாசமற்ற செயல் என்று கூறலாம்: ஆனால் இந்தியாவுக்கும் இலங்கைக்குமுள்ள பிணைப்பு தைப்பற்றி பௌத்தர்கள் பெருமையடையலாம். இந்துக்களுக்கும் இதேபோல நெருங்கிய உறவுண்டு. சிங்களவர்களுக்கு அவர்களது மதம் ஊற்றெடுத்த இடமென்ற பெருமை உண்டு. தமிழர் தமக்குள்ள மொழித்

## டாக்டர் ஹுசேன் மறைவு குறித்து வி. என். நவரத்தினம் இரங்கலுரை



“இந்தியாவின் பேரிழப்புக் குறித்து இந் நாட்டின் சகல பகுதி மக்களிடமும் தோன்றியுள்ள ஒரு முகமான துயரம், இந்திய உப கண்டத்துடன் இந்நாடு கொண்டுள்ள நெருங்கிய, பிரிக்கமுடியாத தொடர்புக்கு சான்றாகவிளங்குகிறது. எல்லா இலங்கையர்களின் உள்ளங்களிலும் ஆழமான எவராலும் அறுக்க முடியாத ஒன்று.

நாங்கள் பௌத்தர்கள், இந்துக்களாக இருந்தாலும், சிங்களவர்கள்- தமிழர்களாக இருந்தாலும் இந்தியாவுடன் தொடர்பு கொண்டவர்களாகவே இருக்கிறோம். பௌத்தர்கள் பிறந்த புனித இடத் தொடர்புபற்றி மேலும் பெருமைபடையலாம். நமது மூதாதையர்கள் முற்காலத்தில் அந்தப் புனித நாட்டிலிருந்துதான் வந்தார்கள் என்பதை மறந்துவிடமுடியாது. இதனால்தான் இந்தியாவை துக்கம் சூழ்ந்தால் நாமும் துயரடைகிறோம்.

இப்படியான திடீர் துயரங்கள் அடிக்கடி இந்தியாவில் ஏன் நிகழ்கின்றனவோ தெரியாது. பெப்ரவரி 3ந் திகதியிலும் இந்திய அன்னை தனது அரிய புதல்வர்களில் ஒருவரை இழந்தாள். அந்தச் சமயத்தில் டாக்டர் ஹுசைன் கண்களில் நீர்பெருக காலஞ்சென்ற திரு. சி. என். அண்ணாதுரையின் சேவைகளைப் பாராட்டி தமது மரியாதையைத் தெரிவித்தார். இன்று டாக்டர் ஹுசைனே எம்முடன் இல்லை; இந்தியா புனிதமான ஒரு ஜனாதிபதியையும், இலங்கை பெறுமதியான ஒருவரையும் இழந்துவிட்டது.

டாக்டர் ஹுசைன் நாட்டின் உயர்பதவிக்கு நியமிக்கப்பட்டது இந்தியாவில் ஜனநாயகத்துக்கு கிடைத்த பெருவெற்றியாகும். இந்து-முஸ்லிம் கலகம் நடைபெற்ற சிலகாலத்தில் இப்படி ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவரை உயர்பதவிக்கு அமர்த்தி இந்தியா கௌரவித்தது. இதில் முக்கியமாக அமைந்தது என்னவென்றால் அவரது நியமனத்தை எவராவது ஆட்சேபிக்காதது தான்.”

## “சிங்களக் குடியேற்றம் நடைபெறவில்லையே”

“வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றத்தை ஆரம்பித்தது தமது அரசாங்கமே என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயகா பெருமையடித்துக்கொண்டார். ஆனால் உண்மையில் கடந்த 4 ஆண்டுகளாக எங்கே குடியேற்றம் நடைபெற்றது? 1965ம் ஆண்டு தேசிய அரசாங்கம் ஏற்பட்ட பின்னர் வடக்கு கிழக்கில் ஒரு சிங்களவராவது குடியேற்றப்படவில்லையென்பதை அவரால் மறுக்கமுடியுமா?

—இவ்வாறு தென்னிலங்கையில் நடைபெற்ற கூட்டமொன்றில் திரு. ஹேமா பசநாயகா கேட்டுள்ளார்.

# வட அயர்லாந்தில் சிறுபான்மையினர் தொடுத்துள்ள விடுதலைப் போர்

கத்தோலிக்கருக்கும் புரட்டஸ்தாந்த மதத்தினருக்கும் இடையே நீண்டகாலமாக நிலவி வரும் மனக்கசப்பை மையமாக வைத்து வட அயர்லாந்தில் மீண்டும் கலவரங்கள் தலைதூக்கியுள்ளன.

பல நூற்றாண்டு காலமாக இரத்தக்களரியை ஏற்படுத்தி வந்த இந்த பிரச்சினை மீண்டும் பலரின் உயிர்களை குடிக்காமல் இருக்க பிரித்தானிய படைகள் வட அயர்லாந்தின் முக்கிய நகரங்களில் இரவு பகலாக ரோந்து புரிந்து வருகின்றனர்.

சென்றஆண்டுஅக்டோபர் மாதம் முதல் வட அயர்லாந்திலுள்ள சிறுபான்மை இனத்தவரான கத்தோலிக்கருக்கும், தீவிரவாத புரட்டஸ்தாந்தருக்குமிடையே ஆங்காங்கு மோதல்கள் நடம் பெற்றன.

இந்த மோதல்கள் உச்சக் கட்டத்தையடைந்து இனக்கலவரத்தை உண்டு பண்ணும் அளவுக்கு தீவிரமாகியுள்ளது.

அரசியல் உரிமைகள்கோரி கத்தோலிக்க சிறுபான்மையினர் ஆர்ப்பாட்டங்கள் செய்தபோது, தீவிரவாத புரட்டஸ்தாந்த மக்கள் இவர்களுக்கு எதிராக பலாத்கார நடவடிக்கைகளில் இறங்கினர்.

இந்தஅர்ப்பாட்டங்களில் சுமார் 250 பேர் படுங்காயங்கள் அடைந்தனர், அரசியல் உரிமை கோரும் கத்தோலிக்கருக்கும், தீவிரவாத புரட்டஸ்தாந்தருக்குமிடையே நிகழ்ந்த கலவரத்தை அடக்க முன்நின்ற பொலிஸார்களே அதிகம் காயம் அடைந்தனர்.

ஆர்ப்பாட்டங்களின் போது ஒன்பது தபால் நிலையங்கள் தகர்த்தெறியப்பட்டுள்ளன.

### மிகப் பழைய பிரச்சினை

வட அயர்லாந்தில் உருவாகியுள்ள மதக் குரோதமும், அதனை மையமாக வைத்து, கத்தோலிக்க சிறுபான்மையினர் ஆரம்பித்துள்ள அரசியல் உரிமை போராட்டமும், இன்று நேற்று எழுந்த பிரச்சினை அன்று.

ஏழு நூற்றாண்டுகளுக்கு முன்வரை அயர்லாந்து நாட்டில் இப்பிரச்சினை தலைதூக்கி காலத்துக்குக் காலம் கலகங்களையும், போராட்டங்களையும், உருவாக்கி பல ஆயிரக்கணக்கானவர்களின் உயிர்களைப் பழிவாங்கியுள்ளது.

தென் அயர்லாந்து சுதந்திர ஐரிஷ் குடியரசாக பிரகடனப்படுத்தப்படுமுன்னர் இங்கிலாந்து அரசாங்கம் அயர்லாந்து நாடு முழுவதிலும் அதிகாரம் செலுத்தி வந்தது.

பரந்த சாம்ராஜ்யத்தை ஆண்டு வந்த இங்கிலாந்து தன் நாட்டுக்கு அருகே இருக்கும் அயர்லாந்தையும், ஒரு குடியேற்ற நாடாக கருதி ஆட்சி புரிந்து வந்தது. இங்கிலாந்தின் அதிகாரத்தில் இருந்து விடுபட்டு சுதந்திர நாடாக மாற வேண்டும் என்று விரும்பிய அயர்லாந்து சத்தோலிக்க மக்கள் தமது அரசியல் உரிமை போராட்டத்தை ஏழு நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஆரம்பித்தனர்.

### உரிமைப் போராட்டம்

19-ம் நூற்றாண்டில் இந்த அரசியல் உரிமைப்போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்தது. 1885ம்-ம் ஆண்டில் கத்தோலிக்கர்கள் அனைவரும் சுயாட்சி வேண்டும் என்று வாக்களித்ததையடுத்து இங்கிலாந்து அரசாங்கம், அயர்லாந்தை மத இன அடிப்படையில் வடக்கு, [illegible] அயர்லாந்துக்கு தனி உள்ளூராட்சி மன்றத்தையும் உருவாக்கிக் கொடுத்தது: இதனால் கத்தோலிக்கர் திருப்தி அடைந்துவிடவில்லை. தென் அயர்லாந்து கத்தோலிக்க மக்களின் “ஹோம் ருல்” இயக்கம் என்ற சுயாட்சி உரிமைப் போராட்டம், 19-ம் நூற்றாண்டு பிற்பகுதியில் இருந்து 20-ம் நூற்றாண்டு முற்பகுதி வரைமிகவும் வேகமாக வளர்ந்து வந்தது.

இந்த சுயாட்சி உரிமைப் போராட்டத்தை அடக்குவதற்காக இங்கிலாந்து இராணுவம், அங்கு வாழ்ந்த புரட்டஸ்தாந்து மக்களின் ஆதரவுடன் பல அட்டூழியங்களைச் செய்து வந்தது.

இந்த சுயாட்சி உரிமைப் போராட்டம், 1949-ம் ஆண்டுவரை நீடித்தது. அந்த ஆண்டிலேயே அயர்லாந்து மக்கள் சுயாட்சி பெற்றனர்.

தென் அயர்லாந்து தனி நாடாகப் பிரிக்கப்பட்ட போதிலும், வடஅயர்லாந்து இங்கிலாந்து அரசாங்கத்தில பகுதியாகவே இருந்து வருகிறது. இங்கு புரட்டஸ்தாந்து மக்கள் பெரும்பான்மையினராகவும், கத்தோலிக்க மக்கள் சிறுபான்மையினராகவும், வாழ்ந்து வருகிறார்கள்.

தென் அயர்லாந்து மக்கள் எவ்வாறு இங்கிலாந்து அரசாங்கத்திற்கு எதிராக பல நூற்றாண்டு காலமாக போராடி, சுயாட்சி பெற்றனரோ அந்த வழியில் வட அயர்லாந்து கத்தோலிக்கச் சிறுபான்மை இன மக்களும், புரட்டஸ்தாந்து ஆட்சியாளரிடம் இருந்து போதிய அரசியல் உரிமைகளைப் பெறுவதற்காக தமது போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இந்த போராட்டங்களின் விளைவாகவே, அண்மையில் வட அயர்லாந்தின் முக்கிய நகரங்களில்கலவரங்கள் தலைதூக்கின.

சிறுபான்மையினராக இருந்து வரும் கத்தோலிக்கர்களின் நியாயமான உரிமைகள் வழங்கப்படாத பட்சத்தில், இப் பிரச்சினை நீறுபூத்த நெருப்பாக இருந்து வருமேயன்றி, முற்றாகதீர்ந்து விடும் என்று கனவுகாண முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூ. என். பியுடன் கூட்டுச்சேர்வதை நவரத்தினம் நூற்றுக்கு நூறு அன்று ஏற்றுக் கொண்டார்!

பிரதமர் டட்லி சேனநாயக்காவை மனம் குளிரச் செய்ய வேண்டும் என்ற நோக்கம் திரு. நவரத்தினம் அவர்கட்கு இருக்குமாயின் நாம் அதற்குக் குறுக்கே நிற்க விரும்பவில்லை. சமீபத்தில் ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு விஜயம் செய்த அமைச்சர் பிரேமதாசாவுக்குப் பச்சைக் கொடிகளோடு வரவேற்பொன்றை திரு. நவரத்தினம் அவர்களும் சேர்ந்து அளித்ததும், அங்கே திரண்ட ஆண்களைக் கொழும்பில் தனக்கு வாக்களிக்குமாறும், பெண்களை ஊர்காவற்றுறையில் திரு நவரத்தினத்திற்கு வாக்களிக்குமாறும் திரு. பிரேமதாசா பேசிய பேச்சும் காட்டும் ஒரு பெரிய உண்மையை தமிழ் மக்கள் மறக்க மாட்டார்கள்.

ஆனல் பிரதமர் டட்லி சேனநாயக்காவிற்கு நற்சாட்சிப்பத்திரம் வழங்குவதற்காகத் தமிழரசுக் கட்சியைப் பற்றி உண்மைகளைத் திரித்துக் கூறிவதை நாம் மறுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழரசுக் கட்சி 1965ம் ஆண்டு திரு. டட்லி சேனநாயக்காவோடு பேச்சுவார்த்தை நடத்திய நேரத்தில் திரு. நவரத்தினமும் அதில் கலந்து கொண்டார். அங்கு எடுக்கப் பட்ட முடிவுகளைத் தானே தட்டச்சில் பொறித்ததாக திரு. நவரத்தினமே பாராளுமன்றத்தில் கூறினர். ஐக்கிய தேசியக்கட்சியோடு சேர்ந்து தேசிய அரசாங்கம் அமைக்கப் படுவதைத் திரு. நவரத்தினம் ஏற்றுக்கொண்டார். கல்முனையில் நடைபெற்றகட்சியின மாநில மகாநாடு இம் முடிவை ஏகமனதாக அங்கீகரித்தபோது திரு. நவரத்தினமும் அதைப் பரிபூரணமாக ஏற்றுக் கொண்டார்.

தமிழ் மொழி உபயோகம் பற்றியசட்டவிதிகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படமுன் எமது கட்சிப் பாராளுமன்றக் குழுவினுல் ஆராயப்படடன. திரு. நவரத்தினம் உட்பட எமது பாராளுமன்ற உறுப்பினர் அனைவரும் அதை ஏற்றுக் கொண்டார்கள். அச்சட்டவிதிகளை நிறைவேற்றியதன் மூலம் தமிழுக்குச் சட்ட பூர்வமாக ஓர் அந்தஸ்துப் பெற்று விட்டோமென திரு. நவரத்தினமே பல கூட்டங்களில் கூறியிருக்கிறர்.

### அரசாங்க ஊழியர் பிரச்னை

அரசாங்க ஊழியர் பற்றி —1965 ஜூலை மாதத்தில் மந்திரிசபை எடுத்த முடிவு எமது கட்சியின் பொதுச் சபையிலே ஆராயப்பட்டது. அம்மந்திரிசபை முடிவை ஒட்டிச் சில விடயங்களை ஆட்சேபித்துப் பிரதம மந்திரிக்குக் கடிதம் எழுதுவதெனவும், அவற்றை ஒட்டி அரசாங்கத்தோடு எமது உறவை முறித்துக் கொள்வதில்லையொன்றும், பொதுச்சபைஏகமனதாகத் தீர்மானித்தது.

இம்மந்திரிசபை முடிவுகளை உள்ளடக்கிய திறைசேரிச் சுற்றறிக்கைகள் 700 701 1966 செப்டம்பர் 4ம் திகதி வெளியிடப் பட்டன. அவற்றை ஆட்சேபித்துக் கட்சிக்குள்ளே, வெளியிலோ திரு. நவரத்தினம் ஒரு வார்த்தையாவது பேசியதில்லை. கட்சி அவற்றை ஏற்றுக்கொண்டதெனதிரு. நவரத்தினம் கூறும் பொது தானும் சேர்ந்து ஏற்றுகொண்டாரென்பதை மறைக்கப் பார்ப்பது முறையல்ல.

தானும் ஏற்றுக் கொண்ட ஒன்றைக் கட்சி செய்த பிழையென அவர் கூறுவதாகஇருந்தால், அது தானும் செய்த பிழையாக ஏற்றுக் கொள்வதே பெருந்தன்மை. இச்சுற்றறிக்கைகள் மூலம் அதற்கு



## சிங்கள ஆசிரியர் நியமனத்தை தடுத்து நிறுத்தியது எமது கட்சி

முன் இருந்ததிலும் பார்க்க தமிழ் அரசாங்க ஊழியர் நிலையை எவ்வளவோ உயரச் செய்திருக்கின்றோம்.

நாம் விரும்பியதை எல்லாம் பெறமுடியாவிட்டாலும் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர் இன்னல்கள் பலதீர வழிவகுத்திருக்கின்றோம். இக்கண்ணேட்டத்தில் இச்சுற்றறிக்கைகளை வரவேற்ற திரு. நவரத்தினம் இன்று கட்சி விட்டுக் கொடுத்து விட்டதாக கூறுவது விதண்டாவாதமாகும்.

வடக்கு மாகாணத்தைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் தமிழ்பேசும் குழந்தைகளுக்குச் சிங்களம் படிப்பிப்பதற்குத் தமிழரசுக் கட்சியினரின் சம்மதத்தோடு சிங் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதாகத் திரு. நவரத்தினம் கூறுவது உண்மையல்ல. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே, முந்திய, சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்க காலத்திலேயே சிங்கள ஆசிரியர்கள் தமிழ்ப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டார்கள். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கூட அப்பொழுதே முஸ்லிம்பாடசாலைகள் சிலவற்றில் சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டார்கள். மன்னர் மகாநாட்டின் பின் கட்சியிலிருந்து ஒதுங்கியிருந்த திரு. நவரத்தினம் அவர்கள் இதை அறியாதிருக்கலாம்.

### நமது எதிர்ப்பு

தேசியஅரசாங்கம் அமைக்கப்பட்டபின் முஸ்லிம் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற முஸ்லிம் பிரதிநிதிகளது ஏகோபித்த கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. ஆனல், வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்கள் நியமிப்பதை நாம் எதிர்த்த காரணத்தினுல், அரசாங்கம் கைவிட்டது. இம்முடிவு எடுக்கப்பட்ட நேரத்தில் கட்சியில் இருந்து அதை ஏற்றுக்கொண்ட திரு. நவரத்தினத்திற்கு உண்மை தெரிந்தும் திரித்துக் கூறுவது அழகல்ல.

சிறிமா—சாஸ்திரி ஒப்பந்த அமுல் மசோதாவிலும், அடையாள அட்டை மசோதாவிலும் தமிழினத்திற்குப் பாதகமான அம்சங்களை நீக்கச் செய்தே, அவற்றை ஆதரித்தோம். கட்டாய நடுகடத்தல், தனியாக்காளர் இடாப்பு என்ற ஒப்பந்தத்தில் கூறப்பட்ட இரண்டு அம்சங்களும் திரு. எஸ். தொண்டமானும் நாமும் எடுத்த முயற்சியாலேயே கைவிடப்பட்டன.

### 27-வது விதி நீக்கப்பட்டது

அதேபோல அடையாள அட்டை மசோதாவில் முன்பு இருந்து எமக்குப் பாகமான 27வது விதியை நீக்கச் செய்தோம். இந்த 27வது விதியை நீக்கி விட்டால் அடையாள அட்டை மசோதாவை நாம் ஆதரிக்கலாம் என்று திரு நவரத்தினமே பாராளுமன்றக் குழுவில் கூறினர்.

இதயபூர்வமாக எமது இனத்திற்கு நன்மையானவற்றை நாம் செய்திருக்கின்றோம் என்ற துணிவு எமக்கு உண்டு. அந்த உண்மையைக் கடந்த காலத்தில் நாம்பிரசாரம் செய்யாது விட்டிருந்தோம். அதற்குக் காரணம் நாம் மேலும் பெற எதிர்பார்த்தவை எமது பிரசாரத்தினுல் பாதிக்கப்படும் என்று கருதியே நாம் அப்படி இருந்தோம். மக்களுக்கு உண்மையை விளக்கிக் கூறினல் மக்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று கூறுவது, இறுமாப்பினுலல்ல. தமிழ் மக்களுடைய நுண்ணிய அறிவில் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையினுலேயே.

### தனிமனிதனும் கட்சியும்

எந்த ஒரு கட்சியிலும் கருத்து வேற்றுமை ஏற்படுவது சகஜம். அவற்றைக் கட்சிக்குள் பேசிக்கட்சியில்பெரும்பான்மையோருடைய கருத்தை எல்லோரும் ஏற்றுக் கொள்வதே ஒழுங்கு.

ஓர் அரசியல் கட்சி ஒரு கட்டுப்பாட்டான ஸ்தாபனமாக இயங்க வேண்டுமானல் இக்கட்டுப் பாட்டை மீறுபவர்களை வெளியேற்றியே தீரும். அப்படிச் செய்யத்தவறினல் அது ஒரு கட்சியாக இருக்க முடியாது. எந்த ஒரு தனிமனிதனும் கட்சிக்கு மேற்பட்டவனக இருக்க முடியாது. அப்படி இருக்க விரும்புபவர்கள் எந்தக் கட்சியிலும் சேர்ந்து இயங்க முடியாது.

### எங்கே போனர்?

கட்சியின் தலைமைப்பீடம் என்றும் பிழைவிட்டுக் கொண்டேவந்ததாகத் திரு. நவரத்தினம் கூறுகிறர். 1968ம் ஆண்டில் திரு நவரத்தினம் [illegible] வரை கட்சி எடுத்த முடிவுகளுக்கெல்லாம் திரு. நவரத்தினமும் உடந்தையாக இருந்தே வந்தார். அந்த மூன்று ஆண்டுகளும் நாம் பிழைவிட்டுக் கொண்டே வந்திருந்தால் திரு. நவரத்தினம் கட்சிச்செயற் குழுவிலோ, பொதுச்சபையிலோ அல்லது மகாநாட்டிலோ ஏன் அவற்றை எடுத்துக் கூறவில்லை? அடையாள அட்டை மசோதாவில் தான் நடந்து கொண்டது சரியானல் கட்சிப் பொதுச் சபை முன் வந்து, ஏன் அதை விளக்கவில்லை? சபையில் கூறவேண்டியதைச் சபையில் கூருது பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுப்பதை எந்தக் கட்சியும் பொறுக்கமாட்டாது. கட்சியின் பொதுச் சபை ஏகமனதாகக் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி கட்சியைக் கேவலமான நிலைக்கு ஆளாக்கிய திரு. நவரத்தினத்தை வெளியேற்றுவதாகத் தீர்மானித்தது.

### மாவட்டக்கிளையை நிந்திக்கிறார்!

இன ஒற்றுமையை விரும்பும் தாம் கட்டுப்பாட்டை மீறித் தான் செய்த தவறை உணர்வதாகக் காட்டும் பொருட்டு திரு. நவரத்தினம் மீண்டும் கட்சியில்சேருவதற்கு மனுச்செய்தால் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஊர்காவற்றுறை மாவட்டக்கிளையின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்தோம். மீண்டும் அங்கத்துவத்திற்கு அவர் மனுச் செய்ய வேண்டுமென கேட்டது ஊர்காவற்றுறை மாவட்டக்கிளையேயன்

## ஊர்காவற்றுறை எம். பியின் பொய்ப் பிரச்சாரத்துக்கு அமிர்தலிங்கம் சாட்டை!

றிக் கட்சித் தலைமைப் பீடமல்ல. கட்சித் தலைமைப் பீடம் ''மனுச் செய்'' என்று தன்னைக்கேட்பதாக திரு. நவரத்தினம் கூறுவது தனது தொகுதி மாவட்டக்கிளையை நிந்தித்த ஓர் செயலாகும்.

### கொள்கையிலிருந்து விலகினர்

கட்சிக் கொள்கையிலிருந்து தான் விலகவில்லை என்று கூறும் திரு. நவரத்தினம் அடுத்த பந்தியில் பூரண சுதந்திரத்தை இலட்சியமாக வைத்து ஒரு புதிய இயக்கம் வேண்டும் என்று கூறுகிறர். இது கட்சியின் இலட்சியமாகிய ஐக்கிய இலங்கை சமஷ்டியின் ஓர் அங்கமாக ஒரு தமிழரசைக்காண வேண்டுமென்ற குறிக்கோளில் இருந்து அவர் விலகிச் சென்றுவிட்டாரென்பதையேகாட்டுகிறது. சமஷ்டி என்ற இலக்கை ஏற்றுக் கொள்வதாகச் சத்தியம் செய்பவரே தமிழரசுக் கட்சியின் அங்கத்தவராகலாம் என்று கட்சியின் அமைப்பு விதி கூறுகிறது. 'நான் கட்சி அங்கத்தவன்' என்று கூறிக் கொண்டு அதே மூச்சில் பூரண சுதந்திரத்தை இலட்சியமாகக் கொண்ட புதிய இயக்கம் வேண்டும் என்று கூறுவதில் உள்ள முரண்பாட்டைத் திரு. நவரத்தினம் காணவிட்டாலும் அறிவு படைத்த தமிழ் மக்கள் காண்பார்கள் என்பது உறுதி.

### பிரதமருக்கு பரிவு

திரு நவரத்தினம் அவர்கள் பிரதமருக்காகப் பரிந்து பேசியது இது முதல் தடவையல்ல என்பதையும் இங்கு நான் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். மாவட்ட சபை பற்றிய வெள்ளையறிக்கை விவாதத்தில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

''அதே நேரத்தில் தமிழரசுக் கட்சி அங்கத்தவர்களுக்கு இத்திட்டத்தை நிறைவேற்றும்படி அவரை வற்புறுத்த வேண்டாமென்று வேண்டுகோள் விடுக்கிறேன். அரசாங்கத்திற்கு அளிக்கும் ஆதரவை வாபஸ்வாங்கும்படி நான் கேட்கவில்லை. இப்பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்திற்கு ஒரு திடமான அரசாங்கத்தை நாம் தொடர்ந்து வைத்திருப்போம். இதுவே எனது மனப்பூர்வமான கருத்து.''

இப்படி அன்று ஆலோசனை கூறிய திரு. நவரத்தினம் எதிர்க்கட்சியில்இருந்தாலும் அமைச்சர் ஈரியகொல்ல மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைத் தவிர, அரசாங்கத்திற்கு விரோதமாக வாக்களித்ததில்லையென்பதும் நாடறிந்த உண்மை. மற்றவர்கள்மீது குற்றங்கூறுமுன் தம் செயல்களை ஆராய்ந்து பார்க்குமாறு திரு. நவரத்தினத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

## யாழ் தமிழ் சங்கம்

''யாழ் தமிழ்ச் சங்கம்'' என்ற அமைப்பு மல்லாகம் விவேகானந்தா கல்வி நிலையத்தில் வைத்து அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இவ் வியக்கமானது அரசியலுக்கு அப்பாற்பட்ட கலாச்சார ரீதியான அமைப்பாக இயங்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ் தமிழ்ச் சங்கத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்கிய ''சிலம்புச் செல்வர்'' ம. பொ. சிவஞானம் ''யாழ் தமிழ்ச் சங்கமானது ஈழம் வாழ் தமிழர்களுக்கு மட்டுமின்றி உலக நாடுகளில் வாழ்கின்ற தமிழர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக அமையவேண்டும்'' என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்பொழுது காட்சி தருகிறது

இங்ஸ்லி (கொழும்பு) சபயர் (வெள்ளவத்தை) மொடோர்ன் (பண்டாரவளை) மொடோர்ன் (பதுளை) விஜிதா (ஹட்டன்) அயன் (மன்னார்)

**சுந்தரராஜன், நாகேஷ், வி. கே. ராமசாமி**

—நடிக்கும்—

இந்திய ஜனாதிபதியின் பரிசுபெற்ற சித்திரம்

# ஆலயம்



2வது வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்நகர்) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) வெப்பிளி (கண்டி)

# அதே கண்கள்

ஈஸ்மன் கலர்

**மே 28 முதல்**

**கெபிட்டல் (கொழும்பு)**

மற்றும் திரைகளில்

★ ஜெய்சங்கர்
★ கே. ஆர். விஜயா
★ அசோகன்
★ நாகேஷ்

—நடிக்கும்—



# பால் மனம்

**3வது வெற்றி வாரம்!**

செல்லமகால் (கொழும்பு) ஈரோஸ் (பாமன்கடை) வின்சர் (யாழ்ப்பாணம்) இம்பீரியல் (மட்டுநகர்)

றீகல் (நுரளை) றீகல் (கம்பளை) நெல்சன் (திருமலை) கிங்ஸ் (பதுளை)

சிவாஜிகணேசன், ஜெயலலிதா

நாகேஷ் நடிக்கும்

# கலாட்டா கல்யாணம்


**2வது ஜனத்திரள் வாரம்!**

சென்ட்ரல் (மருதானை) ராஜேஸ்வரா (மட்டுநகர்) ஜோதி (திருமலை)

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்! யாழ்ப்பாணம் —ராணியில்—

ஜெய்சங்கர், டி.கே. பகவதி, எஸ். வரலட்சுமி
முத்துராமன், கிருஷ்ணகுமாரி, வி. எஸ். ராகவன்
சகுந்தலா, நாகேஷ், மற்றும் பலர் நடித்த,

கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்



# உயிரா? மானமா?

கதை-வசனம்—டைரக்‌ஷன்
கே. எஸ். கோபாலகிருஷ்ணன், —(பாஸ்கள் ரத்து)—

இசை: 'மெல்லிசை - மன்னன்'
எம். எஸ். விஸ்வநாதன்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு ... ரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969-ம் வருட மே மாதம் 16-ந் திகதி வியாழக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது தொலைபேசி: 23451

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org